# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1–2 |
| 2. | நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு | 2 |
| 3. | நீதிமன்றங்களின் எண்ணிக்கை | 2–4 |
| 4. | மாவட்டவாரியாக நீதிமன்றங்கள் | 4 |
| 5. | செலவினங்களின் வகைப்பாடு | 4–5 |
| 6. | உயர்நீதிமன்றம், சென்னை | 5–6 |
| 7. | சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை | 6–7 |
| 8. | உரிமையியல் நீதிமன்றங்கள் | 7–12 |
| 9. | குற்றவியல் நீதிமன்றங்கள் | 12–14 |
| 10. | சிறப்பு நீதிமன்றங்கள் | 14–31 |
| 11. | நிலுவையிலுள்ள வழக்குகளின் விவரம் | 31–32 |
| 12. | தமிழ் வழியிலான சட்ட இதழ் | 32 |
| 13. | மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம் | 32–34 |
| 14. | பதினான்காவது நிதிக்குழுவின் பரிந்துரை | 34–38 |
| 15. | நீதிமன்ற மேலாளர்கள் | 38–39 |
| 16. | நீதித்துறை அமைப்புகளை கணினிமயமாக்கல் | 39–45 |
| 17. | உரிமையியல் நீதிபதிகள் நியமனம் | 45–47 |
| 18. | நீதித்துறை பயிற்சிக் கழகம் | 47–48 |

| | | |
|---|---|---|
| 19. | உயர்நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழ் மொழியை பயன்படுத்துதல் | 48–49 |
| 20. | நீதித்துறை முத்திரைத்தாள் மின்னணுமயமாக்கல் | 49–50 |
| 21. | தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதி | 51 |
| 22. | தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதி | 51 |
| 23. | நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் | 52 |
| 24. | புதிய நீதிமன்றங்கள் | 53 |
| 25. | 2018–2019–ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட பிற வசதிகள் | 53–55 |
| 26. | தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு | 55–67 |
| 27. | அரசு வழக்காடும் துறை, உயர்நீதிமன்றம், சென்னை | 67–68 |
| 28. | குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம் | 68–71 |
| 29. | விடுமுறை கால குடும்ப நல நீதிமன்றங்கள் | 71–72 |
| 30. | முடிவுரை | 72 |
| | பிற்சேர்க்கை 1 முதல் 7 வரை | 73–87 |

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## நீதி நிருவாகம்

## மானியக் கோரிக்கை எண். 3

## கொள்கை விளக்கக் குறிப்பு 2019 – 2020

**முன்னுரை**

அனைத்து மக்களுக்கும் நடுநிலையான நீதி வழங்குவது என்பது ஒரு நாட்டின் தலையாய கடமைகளுள் ஒன்றாக தொன்றுதொட்டே கருதப்படுகிறது. இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி குடிமக்களுக்கு எளிதாகவும் விரைவாகவும் நீதி கிடைப்பதை உறுதி செய்வது ஓர் அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும்.

தமிழகத்தில் நீதித்துறையின் வளர்ச்சியும் அவற்றிற்கான அடிப்படை வளர்ச்சிகளும் குறிப்பிடத்தக்க வகையில் மேம்பாடு அடைந்துள்ளன. நீதித்துறையின் தனித்தன்மை பாதுகாக்கப்பட்டு தகுந்த சூழ்நிலை அமைவதற்கு அரசு மிகவும் ஆர்வம் கொண்டுள்ளது. சிறந்த சேவையினை வழக்காடும் மக்களுக்கு வழங்கும்பொருட்டு நீதித்துறை அமைப்பிற்கு தேவையான கட்டடங்கள், வசதிகள்,

மனித சக்தி மற்றும் பிற அடிப்படை வசதிகள் வழங்க இவ்வரசு உறுதிகொண்டுள்ளது.

**2. நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு**

நமது நாட்டின் முதன்மை நீதிமன்றமாக புதுதில்லியிலுள்ள இந்திய உச்சநீதிமன்றம் உள்ளது. மாநிலங்களிலுள்ள அனைத்து உயர்நீதிமன்றங்களும் உச்சநீதிமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்றன. மாநிலத்திலுள்ள நீதித்துறையின் படிநிலை அமைப்பு பிற்சேர்க்கை 1–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**3. நீதிமன்றங்களின் எண்ணிக்கை**

இம்மாநிலத்தில், மொத்தம் 1149 நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. இவற்றுள், சென்னை மாநகரில் 126 நீதிமன்றங்களும், இதர மாவட்டங்களில் 1023 நீதிமன்றங்களும் இயங்கிவருகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

**நீதிமன்றங்கள்**

| | | |
|---|---|---|
| (i) | மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | 39 |
| (ii) | சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் | 17 |
| (iii) | மாவட்ட மற்றும் கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் | 85 |

| | | |
|---|---|---|
| (iv) | சார்பு நீதிமன்றங்கள் | 149 |
| (v) | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | 195 |
| (vi) | சென்னை பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள் | 36 |
| (vii) | தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | 32 |
| (viii) | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | 219 |
| (ix) | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் | 54 |
| (x) | தொழிலாளர் நல நீதிமன்றங்கள் | 15 |
| (xi) | குடும்ப நல நீதிமன்றங்கள் | 30 |
| (xii) | மகளிர் நீதிமன்றங்கள் மற்றும் கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் | 45 |
| (xiii) | விரைவு நீதிமன்றங்கள் | 50 |
| (xiv) | நில அபகரிப்பு தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றங்கள் | 26 |
| (xv) | மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனு மற்றும் நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான அசல் மனு வழக்குகளை விசாரிப்பதெற்கென சிறப்பு நீதிமன்றங்கள் | 34 |
| (xvi) | மாநில போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 12 |
| (xvii) | மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு | 32 |
| (xviii) | நடமாடும் நீதிமன்றங்கள் | 12 |

| | | |
|---|---|---|
| (xix) | நிரந்தர மக்கள் நீதிமன்றம் | **32** |
| (xx) | இதர சிறப்பு நீதிமன்றங்கள் | **52** |

**அலுவலகங்கள்**

| | |
|---|---|
| நொடித்தவர் சொத்தாட்சியர், உயர்நீதிமன்றம், சென்னை | |
| அரசு தலைமை சொத்தாட்சியர் மற்றும் அரசு பொறுப்பு சொத்தாட்சியர், சென்னை | **1** |
| துணை அரசு சொத்தாட்சியர் மற்றும் அரசு பொறுப்பு சொத்தாட்சியர், சென்னை | **1** |

**4. மாவட்ட வாரியாக நீதிமன்றங்கள்**

சென்னை மாநகரில் செயல்பட்டுவரும் நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் மற்றும் இதர மாவட்டங்களில் செயல்பட்டுவரும் நீதிமன்றங்கள்/ தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் முறையே பிற்சேர்க்கை **2** மற்றும் **3**–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**5. செலவினங்களின் வகைப்பாடு**

சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் மற்றும் மதுரை கிளை ஆகியவை குறித்த செலவினங்கள், "சாட்டிய செலவினம்" எனவும், நீதி நிருவாகம் குறித்த பிற

செலவினங்கள் “அனுமதிக்கப்பட்ட செலவினம்” எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**6. உயர்நீதிமன்றம், சென்னை**

**6.1** மாநிலத்தின் உயரிய நீதி அமைப்பு சென்னை உயர்நீதிமன்றம் ஆகும். சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை ஆகியவற்றிற்கு அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 75 ஆகும். சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் மற்றும் மதுரை கிளை ஆகியவை தற்போது 59 நீதிபதிகளை கொண்டு இயங்கி வருகிறது. உயர்நீதிமன்றம், உரிமையியல் வழக்குகளின் அசல் மனுக்களையும் மற்றும் சிறப்பு அசல் மனுக்களையும் (நீதிப்பேராணை) விசாரிக்கும் அதிகாரங்களைப் பெற்றுள்ளது. இந்நீதிமன்றம், உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளின் மேல்முறையீட்டினை விசாரணை செய்யும் அதிகாரத்தையும் பெற்றுள்ளது. உரிமையியல் தொடர்பான அசல் வழக்குகளை பொறுத்தமட்டில் சென்னை மாநகரத்துக்குள் எழும் ரூ.1.00 கோடிக்கு அதிகமான மதிப்புள்ள வழக்குகளை உயர்நீதிமன்றம் விசாரிக்கிறது. சென்னை உயர்நீதிமன்ற அதிகார எல்லைக்குள் புதுச்சேரி யூனியன் பகுதி

நீதிமன்றங்களும் அடங்கும். புதுச்சேரி யூனியன் பகுதி தொடர்பான பணிகளைக் கவனிக்கும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் குறித்த செலவு முதற்கண் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் அச்செலவுத் தொகை புதுச்சேரி அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

**6.2** நீதிபரிபாலனம் செய்வதுடன், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யூனியன் பகுதி உள்ளிட்ட அனைத்து சார்நிலை நீதிமன்றங்களின் முழு நிருவாகப் பொறுப்பையும் சென்னை உயர்நீதிமன்றம் மேற்கொள்கிறது.

**7. சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை**

7.1 சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையானது, 24.07.2004 அன்று தொடங்கி வைக்கப்பட்டு இயங்கி வருகிறது. இதன் அதிகார எல்லை மதுரை, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கரூர், சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தேனி ஆகிய 13 மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். தற்பொழுது சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை 16 நீதிபதிகளைக் கொண்டு இயங்கி வருகிறது. அசல் வழக்குகளின் அதிகார வரம்பினைத்

தவிர, சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் பெற்றுள்ள அனைத்து அதிகாரங்களையும் இந்நீதிமன்றம் கொண்டுள்ளது.

**8. உரிமையியல் நீதிமன்றங்கள்**

**8.1 சென்னை மாநகர்**

**(அ) மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை**

சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றங்களில் மாவட்ட நீதிபதி பதவி நிலையில் 20 நீதிபதிகள் (ஒரு மகளிர் நீதிமன்ற நீதிபதி உட்பட), முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் 18 நீதிபதிகள் மற்றும் நிருவாக பொறுப்பு வகிக்கும் உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் ஒரு பதிவாளர் உட்பட, மொத்தம் 39 நீதிபதிகள் உள்ளனர். இந்நீதிமன்றத்தின் அதிகாரவரம்பானது சென்னை மாநகர் எல்லை முழுவதையும் கொண்டுள்ளது. வழக்கின் பண மதிப்பினை பொறுத்தமட்டில், உதவி நீதிபதி ரூ.10.00 இலட்சம் வரையிலும், முதன்மை நீதிபதி ரூ.10.00 இலட்சத்திற்கு மேல் ரூ.1.00 கோடிக்கு மிகாமலும் விசாரிக்கும் அதிகார வரம்பினைப் பெற்றுள்ளனர். ஒரு வழக்கின் பண மதிப்பு ரூ.1.00 கோடிக்கு மேற்படின் அவ்வழக்கு, சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட வேண்டும். சென்னை அமர்வு பிரிவிற்கு, மாநகர உரிமையியல்

நீதிமன்றமே அமர்வு நீதிமன்றமாகவும் செயல்பட்டு வருகிறது. 1988–ஆம் ஆண்டின் ஊழல் தடுப்புச் சட்டப் பிரிவுகளின் கீழ் தொடரப்படும் ஊழல் வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்கென ஒரு கூடுதல் மாநகர உரிமையியல் நீதிமன்றம், செயல்பட்டு வருகிறது. மேலும், 1997–ஆம் ஆண்டின் தமிழ்நாடு வைப்பீட்டுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) நலன்காக்கும் சட்டம், தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

**(ஆ) சிறு வழக்கு நீதிமன்றங்கள், சென்னை**

மாவட்ட நீதிபதி பதவி நிலையிலுள்ள நீதிபதி ஒருவர் சிறு வழக்கு நீதிமன்றத்திற்கு தலைமை வகிக்கிறார். இவரை தவிர, முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் 8 நீதிபதிகளும், நிருவாகப் பொறுப்பு வகிக்கின்ற பதிவாளர் உட்பட உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் 8 நீதிபதிகளும் ஆக மொத்தம் 17 நீதிபதிகள் இந்நீதிமன்றங்களில் பணியாற்றுகின்றனர். பதிவாளர், நீதிமன்றப் பணிகளான சில குறிப்பிட்ட நிறைவேற்று மனுக்களை முடிவு செய்தல் போன்ற பணிகளையும் கவனிக்கிறார். இந்நீதிமன்றங்கள், 1882–ஆம் ஆண்டின் மாகாணச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ் வரும் சிறு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களை

பெற்றுள்ளன. ஐந்தாவது மற்றும் ஆறாவது சிறுவழக்கு நீதிமன்றங்கள், **1988**–ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டம் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் பிரத்யேக தீர்ப்பாயங்களாகவும் செயல்படுகின்றன. தலைமை நீதிபதி, இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது நீதிமன்றங்களின் நீதிபதிகள், மோட்டார் வாகனச் சட்டம் தொடர்பான வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர். பத்து முதல் பதினாறு வரையுள்ள நீதிமன்றங்களின் நீதிபதிகள், சென்னை மாநகரத்திற்கான வாடகை கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயல்படுகின்றனர். மேலும், தலைமை நீதிபதி, இரண்டு, மூன்று, நான்கு, ஏழு மற்றும் எட்டாவது நீதிமன்றங்களின் நீதிபதிகள் வாடகை கட்டுப்பாடு தொடர்பான மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர்.

## 8.2 வெளியூர் நீதிமன்றங்கள்

### (அ) மாவட்ட நீதிமன்றங்கள்/கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள்

இம்மாநிலத்தில் **31** மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் **54** கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் உட்பட ஆக மொத்தம் **85** மாவட்ட நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மாநில

தொழிலாளர் காப்புறுதிச் சட்டம், **1948**, எஸ்டேட் ஒழிப்புச் சட்டம், **1948** மற்றும் மோட்டார் வாகனச் சட்டம், **1988** போன்ற சில குறிப்பிட்ட தனிச் சட்டங்கள் தொடர்பான சிறப்புத் தீர்ப்பாயங்களாகவும் மாவட்ட நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. மாவட்ட நீதிபதிகள் அவரவர் பகுதிகளுக்கான அமர்வு நீதிமன்ற நீதிபதிகளாகவும் உள்ளனர். வழக்கின் பண மதிப்பை பொறுத்தமட்டில் ரூ.**10.00** இலட்சம் மற்றும் அதற்கு மேல் உச்ச வரம்பற்ற வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தினை மாவட்ட நீதிபதிகள் பெற்றுள்ளனர். இவர்கள் தத்தம் பகுதியில் எழக்கூடிய உரிமையியல் மேல் முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர். மேலும், தத்தம் ஆளுகைக்குட்பட்ட சார்நிலை நீதிமன்றங்களையும் ஆய்வு செய்கின்றனர்.

**(ஆ) சார்பு நீதிமன்றங்கள்**

இம்மாநிலத்தில், **149** சார்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நீதிமன்றங்களின் அதிகார எல்லையானது உரிமையியல் நீதிமன்றச் சட்டம், **1892**–ன் படி வரையறுக்கப்பட்டுள்ளது. சார்பு நீதிமன்றங்கள்

ரூ.1.00 இலட்சத்திற்கு மேலும், ஆனால் ரூ.10.00 இலட்சத்திற்கு மிகாமலும் பணமதிப்பு கொண்ட அனைத்து உரிமையியல் வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளன. மேலும், தத்தம் எல்லைக்குட்பட்ட மாவட்ட உரிமையியல் நீதிமன்ற முடிவிற்கெதிராக தொடரப்படும் ரூ.1.00 இலட்சம் வரையிலான மதிப்புக்குட்பட்ட மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் இந்நீதிமன்றங்கள் பெற்றுள்ளன. மேலும், இந்நீதிமன்றங்கள், உதவி அமர்வு நீதிமன்றங்களாகவும் மற்றும் மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயங்களாகவும் செயல்படுகின்றன.

### (இ) மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்

இம்மாநிலத்தில், 195 மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ரூ.1.00 இலட்சம் வரையிலான பண மதிப்புடைய வழக்குகளை விசாரித்து வருகின்றன. மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ஒவ்வொன்றும் அவற்றிற்கென்று வரையறுக்கப்பட்ட அதிகார எல்லையை கொண்டுள்ளன. மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ரூ.20,000/– வரையிலான சிறு வழக்குகளையும் விசாரித்து

வருகின்றன. இந்நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் வரம்புக்குட்பட்ட பகுதிகளுக்கு வாடகை கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயலாற்றுகின்றனர்.

**(ஈ) மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள்**

இந்நீதிமன்றங்கள் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கின்றன. இம்மாநிலத்தில் 54 மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

**9. குற்றவியல் நீதிமன்றங்கள்**

**9.1 சென்னை மாநகர்**

சென்னை மாநகரில் தலைமை பெருநகர குற்றவியல் நடுவரின் நிருவாக கட்டுப்பாட்டில் 36 பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள் மாவட்ட நீதிபதி தரத்தில் 2 பெருநகர குற்றவியல் நடுவர்களும், முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவி தரத்தில் 27 பெருநகர குற்றவியல் நடுவர்களும், உரிமையியல் நீதிபதி பதவி தரத்தில் 7 பெருநகர குற்றவியல் நடுவர்களும் ( 4 விரைவு நீதிமன்றங்கள், 2 நில அபகரிப்பு வழக்குகளுக்கான சிறப்பு

நீதிமன்றங்கள் மற்றும் ஒரு கூடுதல் மகளிர் நீதிமன்றம் உட்பட) அடங்குவர். பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் சென்னை மாநகரில் தத்தம் அதிகார வரம்புக்குட்பட்டு குறிப்பிட்ட காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வழக்குகளை விசாரிக்கின்றன.

### 9.2 வெளியூர் நீதிமன்றங்கள்

#### (அ) தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

இம்மாநிலத்தில், **32** தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் நிருவாக கட்டுப்பாட்டில் அந்தந்த மாவட்ட குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இயங்குகின்றன. சில வகையான வழக்குகளில், உதவி அமர்வு நீதிபதிக்குரிய அதிகாரங்கள் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளன.

#### (ஆ) குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

இம்மாநிலத்தில், **219** குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. குற்றவியல் நடுவர் நீதிமன்றம், குற்றவியல் நீதி நிருவாகத்தில் கீழ்நிலையில் இயங்கும்

நீதிமன்றம் ஆகும். இந்நடுவர் நீதிமன்றத்தில், ஓராண்டிற்கு மேற்படாத சிறைத் தண்டனையோ அல்லது ரூ.5,000/—ற்கு மிகையில்லாத அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்தோ விதிக்கக்கூடிய குற்ற வழக்குகள் மட்டுமே விசாரிக்கப்படுகின்றன. இந்நீதிமன்றங்கள் ஏறக்குறைய இம்மாநிலத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் இயங்கி வருகின்றன.

**10. சிறப்பு நீதிமன்றங்கள்**

**(அ) தொழிலாளர் நல நீதிமன்றங்கள்**

இம்மாநிலத்தில், 15 தொழிலாளர் நல நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றுள், சென்னையில் நான்கும், தலா ஒரு நீதிமன்றம் வீதம் வேலூர், கோயம்புத்தூர், காஞ்சிபுரம், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, கடலூர், திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் ஒன்பதும் மற்றும் தலா ஒன்று வீதம் கோயம்புத்தூர் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் இரண்டு கூடுதல் தொழிலாளர் நல நீதிமன்றங்களும் இயங்கி வருகின்றன. இவை தவிர, மாநிலத்தின் அனைத்து பகுதிகள் மீதும் அதிகார வரம்பு கொண்ட தொழில் வழக்கு தீர்ப்பாயம் ஒன்றும் சென்னையில்

இயங்கி வருகிறது. தொழிலாளர் நல நீதிமன்றம் மற்றும் தொழில் வழக்கு தீர்ப்பாயம் ஆகியவற்றின் தலைமை அலுவலர்கள் மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் உள்ளனர். தொழிலாளர் நல நீதிமன்றங்கள், அரசு அனுப்பி வைக்கும் தொழிலாளர் குறித்த சர்ச்சைகளையும், பாதிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்யும் உரிமை கோரிக்கை மனுக்களையும் விசாரித்து தீர்ப்புரைக்கின்றன. இத்தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் தொழில் வழக்கு தீர்ப்பாயம் ஆகியவற்றின் நீதிபதிகள், தத்தம் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, முகாம் நீதிமன்றங்கள் நடத்தி தொழிலாளர் தொடர்பான சர்ச்சைகள் மற்றும் இழப்பீட்டு கோரிக்கை மனுக்களை விசாரித்து தீர்ப்புரைக்கின்றனர்.

**(ஆ) பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989 மற்றும் குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955 தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்கள்**

பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், **1989** மற்றும் குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், **1955** ஆகிய சட்டங்களின் கீழ்

பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்க மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் ஏழு சிறப்பு நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் செயல்படுகின்றன. இந்நீதிமன்றங்கள் மற்றும் அவற்றின் அதிகார எல்லைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:–

| வ. எண். | நீதிமன்றத்தின் பெயர் | மாவட்ட அதிகார எல்லை |
|---|---|---|
| **குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்ட நீதிமன்றங்கள்** | | |
| 1. | கூடுதல் அமர்வு நீதிமன்றம்–I, திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி |
| 2. | கூடுதல் அமர்வு நீதிமன்றம்–I, தஞ்சாவூர் | (i) தஞ்சாவூர்<br>(ii) திருவாரூர் |
| 3. | கூடுதல் அமர்வு நீதிமன்றம்–II, திருநெல்வேலி | (i)திருநெல்வேலி<br>(ii)தூத்துக்குடி<br>(iii)கன்னியாகுமரி |
| 4. | கூடுதல் அமர்வு நீதிமன்றம்–III, மதுரை | மதுரை |
| **பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்ட நீதிமன்றங்கள்** | | |
| 5. | மாவட்ட நீதிபதி தரத்தில் சிறப்பு நீதிமன்றம், விழுப்புரம் | விழுப்புரம் |
| 6. | மாவட்ட நீதிபதி தரத்தில் சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை | சிவகங்கை |
| 7. | மாவட்ட நீதிபதி தரத்தில் சிறப்பு நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர் | விருதுநகர் |

மேலும் பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், **1989** தொடர்பான வழக்குகளை விசாரணை செய்ய, **16** சிறப்பு நீதிமன்றங்கள் **2016–2017** முதல் **2019–2020** வரையிலான காலத்தில் நான்கு கட்டங்களாக தோற்றுவிப்பதற்கு நிருவாக ஒப்புதலளிக்கப்பட்டிருப்பதுடன், முதல் மற்றும் இரண்டாம் கட்டமாக நீதிமன்றங்கள் தோற்றுவிப்பதற்கு நிதி ஒப்புளிப்பும் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கட்டத்திலும் நான்கு நீதிமன்றங்கள் வீதம் **2016–2017** மற்றும் **2018–2019** ஆகிய ஆண்டுகளில் கீழ்க்காணும் இடங்களில் **8** நீதிமன்றங்கள் தோற்றுவிப்பதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

1. திண்டுக்கல்
2. இராமநாதபுரம்
3. ஸ்ரீவில்லிப்புத்தூர் (விருதுநகர் மாவட்டம்)
4. புதுக்கோட்டை
5. கடலூர்
6. நாமக்கல்
7. தேனி
8. திருவண்ணாமலை

இவற்றுள் ஸ்ரீவில்லிபுத்தூரில் சிறப்பு நீதிமன்றம் தோற்றுவிக்கப்பட்டு இயங்கி வருகிறது.

இதர மாவட்டங்களில் அந்தந்த மாவட்டத்திலுள்ள முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்களுக்கு மேற்குறிப்பிட்ட சட்டங்களின் கீழ் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளின் மீது விசாரணை மேற்கொள்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**(இ) பொருளாதார குற்றங்களுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்**

மத்திய சட்டங்களை மீறுவதனால் பதிவு செய்யப்படும் பொருளாதார குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையில், மாவட்ட நீதிபதி பதவி நிலையில் இரண்டு கூடுதல் முதன்மை பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களும் (பொருளாதாரக் குற்றங்கள்–1 மற்றும் பொருளாதாரக் குற்றங்கள்–2) மற்றும் மதுரையில், முதுநிலை உரிமையியல் நீதிபதி நிலையில் கூடுதல் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன.

**(ஈ) குடும்ப நல நீதிமன்றங்கள்**

குடும்ப நல நீதிமன்றங்கள் சட்டம், 1984–ல் திருமணம் மற்றும் குடும்ப விவகாரங்கள் தொடர்பான வழக்குகளில்

இணக்கத்தை மேம்படுத்தவும் மற்றும் அவ்வழக்குகளை விரைந்து முடிக்கவும் குடும்ப நல நீதிமன்றங்கள் அமைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் 30 குடும்ப நல நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் பணிபுரியும் வழக்காடுபவர்களின் வசதிக்காகச் சென்னையில் நான்கு விடுமுறை கால குடும்ப நல நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், பதினான்காவது நிதிக்குழுவின் பரிந்துரையின் கீழ், கூடுதலாக 3 குடும்ப நல நீதிமன்றங்கள் தலா ஒன்று வீதம் பெரம்பலூர், புதுக்கோட்டை, திருவண்ணாமலை ஆகிய இடங்களில் 2019–2020–ஆம் ஆண்டில் ஏற்படுத்துவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**(உ) தமிழ்நாடு வைப்பீட்டுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம், 1997–ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்**

தமிழ்நாடு வைப்பீட்டுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம், 1997–ன் கீழ் பதிவு செய்யப்படும் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

இந்நீதிமன்றங்கள், வங்கி சாரா நிதி நிறுவனங்கள் மற்றும் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் மீது பதிவு செய்யப்படும் பொருளாதார குற்றங்களாகிய பணமோசடி மற்றும் பணம் திருப்பிச் செலுத்தாத வழக்குகளில் விரைவாக விசாரணை மேற்கொண்டு சொத்துக்களை முடக்கி விற்பனை செய்து வைப்பீட்டுதாரர்களுக்கு திரும்ப அளித்தல் ஆகியவற்றை மேற்கொண்டு வருகின்றன.

**(ஊ) மத்திய குற்றப்புலனாய்வுத் துறை (CBI) வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்கள்**

மத்திய குற்றப் புலனாய்வுத் துறையினால் பதிவு செய்யப்படும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென சென்னையில் ஆறு சிறப்பு நீதிமன்றங்களும், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் தலா ஒன்று வீதம் மொத்தம் எட்டு சிறப்பு நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டுவருகின்றன. இவற்றுள், வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களின் நிதிமுறைகேடு வழக்குகளை விசாரணை செய்வதற்கு சென்னையில் இயங்கிவரும் ஒரு சிறப்பு நீதிமன்றமும் அடங்கும்.

**(எ) ஊழல் தடுப்புச் சட்டம், 1988–ன் கீழ் வரும் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்**

ஊழல் தடுப்புச் சட்டம், 1988 (மத்திய சட்டம் 49/1988)–ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, விழுப்புரம், சேலம், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் எட்டு சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

**(ஏ) போதை மருந்துகள் மற்றும் மன மயக்க பொருட்கள் சட்டம், 1985–ன் கீழ் வரும் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்**

போதை மருந்துகள் மற்றும் மன மயக்க பொருட்கள் சட்டம், 1985–ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்காக சென்னை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தலா இரண்டு வீதம் நான்கு சிறப்பு நீதிமன்றங்களும் மற்றும் விழுப்புரத்தில் ஒரு சிறப்பு நீதிமன்றமும் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

**(ஐ) அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955–ன் கீழ் வரும் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்**

அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், **1955–ன்** கீழ் பதிவாகும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிக்க மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி பதவி நிலையிலுள்ள நீதிபதியின் கீழ் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, சேலம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் மொத்தம் ஆறு சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

**(ஒ) சந்தனக்கட்டை தொடர்பான குற்றங்களுக்கான சிறப்பு நீதிமன்றம்**

வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் சந்தனக்கட்டை தொடர்பான குற்ற வழக்குகளை விசாரிப்பதற்கென ஒரு சிறப்பு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

**(ஓ) இரயில்வே நீதிமன்றங்கள்**

இரயில் நிலையங்கள் மற்றும் இரயில்களில் நடைபெறும் குற்றங்கள் மற்றும் பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்வது தொடர்பான வழக்குகளை இந்திய இரயில்வே சட்டம், **1989–ன்** கீழ் விசாரணை செய்வதற்கு ஒன்பது இரயில்வே குற்றவியல்

நடுவர் நீதிமன்றங்கள் வேலூர், கடலூர், கோயம்புத்தூர், சேலம், மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலும், சென்னை எழும்பூர் மற்றும் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இந்நீதிமன்றங்களுக்கான செலவினத்தை மாநில அரசே ஏற்கின்றது. இந்நீதிமன்றங்கள் வசூலிக்கும் அபராதத்தொகை மாநில அரசின் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

**(ஔ) நடமாடும் நீதிமன்றங்கள்**

மோட்டார் வாகனச் சட்டம், **1988 (**மத்திய சட்டம் **59/1988)–**ன் கீழ் பதிவு செய்யப்படும் சிறு குற்றங்கள் மற்றும் ஏனைய சட்டங்கள் தொடர்பான சிறு வழக்குகளை விசாரிப்பதற்கு சென்னையில் இரண்டும், காஞ்சிபுரம், விழுப்புரம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, நாமக்கல், சேலம், ஈரோடு, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம், குற்றவியல் நடுவர் நீதிபதி பதவி நிலையில் **12** நடமாடும் நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இந்நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டதன் விளைவாக சிறு வழக்குகள் விரைந்து முடிக்கப்படுகின்றன.

**(க) பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம், 1987 தொடர்பான சிறப்பு நீதிமன்றங்கள்**

பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம், 1987 (தற்போது நீக்கப்பட்டது)–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு மாநிலத்தில் நான்கு தனி நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றுள், சென்னையில் பெருநகர உரிமையியல் நீதிமன்றத்தின் முதலாவது மற்றும் ஐந்தாவது கூடுதல் நீதிபதிகளும், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் முதன்மை மாவட்ட நீதிபதிகளும் தடா வழக்குகளை விசாரணை செய்வதற்கு சிறப்பு நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

**(ங) குண்டு வெடிப்பு வழக்குகளுக்கான கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள்**

குண்டு வெடிப்பு வழக்குகளை பிரத்யேகமாக விசாரணை செய்வதற்காக கூடுதல் அமர்வு நீதிபதி தரத்தில் இரண்டு சிறப்பு நீதிமன்றங்கள் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை பூவிருந்தவல்லியில் செயல்படும் இந்நீதிமன்றம் பொடா சட்டம்,

2002 (மத்திய சட்டம் 15/2002)–ன் கீழ் வரும் குற்றங்கள் தொடர்பான வழக்குகளையும் விசாரணை செய்கிறது.

**(ச) இனக் கலவரம் தொடர்பான வழக்குகளுக்கான அமர்வு நீதிமன்றம்**

தென்மாவட்ட இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு மதுரையில் ஓர் அமர்வு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

**(ஞ) தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்**

தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்கென சென்னையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

**(ட) போலி முத்திரைத்தாள் மற்றும் கள்ளநோட்டு தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென ஒரு சிறப்பு நீதிமன்றம்**

போலி முத்திரைத்தாள் மற்றும் கள்ளநோட்டு தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென சென்னையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

**(ண) பரிசுச் சீட்டு மற்றும் பணசுழற்சி திட்ட (தடைச்) சட்டம், 1978–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை (CBCID) குற்ற வழக்குகளை விசாரிப்பதற்கென ஒரு சிறப்பு நீதிமன்றம்**

பரிசுச் சீட்டு மற்றும் பணசுழற்சி திட்ட (தடைச்) சட்டம், **1978–ன்** கீழ் பதிவு செய்யப்பட்ட குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை (CBCID) குற்ற வழக்குகளான வழக்கு எண் **3876/2009–ஐ** விசாரிப்பதற்கென சென்னையில் முதுநிலை உரிமையியல் நீதிபதி தரத்தில் ஒரு சிறப்பு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

**(த) மகளிர் நீதிமன்றங்கள் (மகிளா நீதிமன்றங்கள்)**

பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் குற்ற வழக்குகளை விசாரிப்பதற்கென **45** மகளிர் நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள், ஒரு மகளிர் நீதிமன்றம் மற்றும் ஒரு கூடுதல் மகளிர் நீதிமன்றம் சென்னையில் செயல்பட்டு வருகின்றன. மாவட்டங்களில் செயல்பட்டு வரும் எஞ்சிய **43** நீதிமன்றங்களுள் **22** விரைவு மகளிர் நீதிமன்றங்களும் அடங்கும். மேலும், **2018–2019–ஆம்** ஆண்டில் **11** கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் தஞ்சாவூர், தேனி, தூத்துக்குடி, திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், திருவாரூர், விழுப்புரம், ஸ்ரீவில்லிபுத்தூர் (விருதுநகர்),

அரியலூர் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் அமைப்பதற்கு அரசு ஒப்பளித்துள்ளது.

**(ந) மத்திய குற்றப்பிரிவு மற்றும் மாநகர குற்றப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை வழக்குகளுக்கான நீதிமன்றங்கள்**

சென்னை மாநகர மத்திய குற்றப்பிரிவால் பதிவு செய்யப்படும் மோசடி வழக்குகள் மற்றும் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் (CBCID) துறையின் சென்னை மாநகர வழக்குகளை பிரத்யேகமாக விசாரணை செய்ய, சென்னையில் முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவித் தரத்தில் ஒரு சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**(ப) மாலை நேர நீதிமன்றங்கள்**

தேங்கிக்கிடக்கும் சிறு வழக்குகளை துரிதமாக விசாரணை செய்து மற்ற நிரந்தர நீதிமன்றங்களின் பணிச்சுமையைக் குறைப்பதுடன், நீதிமன்ற நேரத்தினையும் சேமிக்க மாலை நேர நீதிமன்றங்கள் உதவுகின்றன. இம்மாநிலத்தில் **53** மாலை நேர நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

**(ம) விரைவு நீதிமன்றங்கள்**

இம்மாநிலத்தில் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள குற்ற வழக்குகளை விசாரிப்பதற்கென 50 விரைவு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகிறது. இவற்றுள், பெருநகர குற்றவியல் நடுவர் பதவித் தரத்தில் சென்னையில் 4 நீதிமன்றங்களும், மாவட்டங்களில் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் 11 நீதிமன்றங்களும் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிபதி பதவித் தரத்தில் 35 நீதிமன்றங்களும் செயல்பட்டு வருகின்றன.

**(ய) மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனு மற்றும் நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான அசல் மனு ஆகிய வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்கள்**

இம்மாநிலத்தில் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனு மற்றும் நிலம் கையகப்படுத்துதல் போன்ற அசல் மனுக்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென 34 சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனுக்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் 9 நீதிமன்றங்களும், முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவித் தரத்தில் 19 நீதிமன்றங்களும் (சென்னையில்

இரண்டு, மாவட்டங்களில் 17 நீதிமன்றங்கள்) செயல்பட்டு வருகின்றன. நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான அசல் மனு வழக்குகளை விசாரணை செய்வதற்கென முதுநிலை உரிமையியல் நீதிபதி தரத்தில் 6 நீதிமன்றங்கள் மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும் பதினான்காவது நிதிக்குழுவின் பரிந்துரையின் கீழ், 2018–2019–ஆம் ஆண்டில் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனுக்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் கூடுதலாக 8 நீதிமன்றங்கள், அதாவது கோயம்புத்தூர் மற்றும் கடலூரில் தலா 2 வீதம் 4 நீதிமன்றங்களும், திருச்சி, திருப்பூர், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்று வீதம் 4 நீதிமன்றங்களும் அமைப்பதற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**(ர) நில அபகரிப்பு தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்கென சிறப்பு நீதிமன்றங்கள்**

மாநிலத்திலுள்ள அனைத்து நகரங்கள் மற்றும் மாவட்டங்களில் 39 நில அபகரிப்பிற்கு எதிரான சிறப்பு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டதன் விளைவாக, அப்பிரிவுகளில் ஏராளமான நில அபகரிப்பு புகார்கள் பதிவாயின. இதனைக்

கருத்திற் கொண்டு, பொதுமக்களுக்கு விரைவாக நீதி கிடைக்கச் செய்யும் நோக்குடன், இவ்வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென சிறப்பு நீதிமன்றங்கள் அமைப்பது அவசியமென கருதப்பட்டது. எனவே, சென்னையில் இரண்டு சிறப்பு நீதிமன்றங்கள் உட்பட, உரிமையியல் நீதிபதி பதவி தரத்தில் **26** சிறப்பு நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் ஏற்படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன் விவரம் பிற்சேர்க்கை **4–**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### (வ) கூடுதல் மாஸ்டர் நீதிமன்றங்கள் (Additional Master Courts)

இம்மாநிலத்தில் **10** கூடுதல் மாஸ்டர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றுள், நான்கு நீதிமன்றங்கள் சென்னை உயர்நீதிமன்றத்திலும், நான்கு சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்திலும் மற்றும் இரண்டு சென்னை சிறு வழக்கு நீதிமன்றத்திலும் உள்ளன. வழக்காடும் நபர்களை அழைப்பாணை மூலம் நீதிமன்றத்தில் முன்னிலை செய்யும் நடைமுறை மற்றும் வழக்கின் சாட்சியங்களை மட்டும் பதிவு செய்யும் பணி நிறைவடையும் வரையில் விசாரணை செய்வதற்காக இந்நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

### (ழ) அரசு தலைமை சொத்தாட்சியர்–பொறுப்பு சொத்தாட்சியர், சென்னை

சென்னையில் மாவட்ட நீதிபதி பதவி நிலையில், அரசு தலைமை சொத்தாட்சியர்–பொறுப்பு சொத்தாட்சியர் உள்ளார். இவருக்கு உதவியாக உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் துணைத் தலைமை சொத்தாட்சியர் – பொறுப்பு சொத்தாட்சியர் உள்ளார். இவ்விரு அதிகாரிகளும் அறக்கட்டளைகளின் சொத்துக்களுக்கும் மற்றும் உரிய வயதடையாதவர்கள் மற்றும் காலஞ்சென்றவர்களின் சொத்துக்களுக்கும் பொறுப்பு வகிக்கின்றனர். இவர்கள் அரசு தலைமை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்புச் சொத்தாட்சியர் சட்டத்தின் விதிமுறைகளுக்கிணங்க, தங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுகின்றனர்.

## 11. நிலுவையிலுள்ள வழக்குகளின் விவரம்

சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம், மதுரையிலுள்ள உயர்நீதிமன்றக் கிளை மற்றும் மாநிலத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களில் **2014–**ஆம் ஆண்டு முதல் **2018–**ஆம் ஆண்டு வரை தொடுக்கப்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள், முடிவடைந்த மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்த விவரம்

முறையே பிற்சேர்க்கை **5, 6** மற்றும் **7**–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**12. தமிழ் வழியிலான சட்ட இதழ்**

சென்னை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்படுகின்ற சிறப்பான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்புகளை வெளிக்கொணரும் வகையில், 'தீர்ப்பு திரட்டு' என்ற பெயரில் தமிழ் வழியிலான சட்ட இதழ், வழக்குரைஞர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மாதமிருமுறை வெளியிடப்பட்டு வருகிறது.

**13. மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்**

**13.1** மத்திய அரசின் நீதித்துறையானது, நீதிமன்றங்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, நீதிமன்றங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான "மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்" என்ற திட்டத்தினை மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு நிதி உதவி அளித்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் சார்நிலை நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான

குடியிருப்புகளை கட்டுவதன் மூலம் விரைந்து நீதி வழங்குவதற்கு வழிவகை செய்கிறது. இத்திட்டத்திற்கான நிதி உதவி **2012–2013–**ஆம் ஆண்டு முதல் மத்திய மற்றும் மாநில அரசுகளால் **75:25** என்ற விகிதாச்சாரத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டது. இவ்விகிதாச்சாரம் **2015–2016–**ஆம் ஆண்டு முதல் **60**:40 ஆக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

**13.2** இத்திட்டத்தின் கீழ் **2006–2007** முதல் **2019–2020–**ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசால் ஒப்பளிக்கப்பட்ட தொகையின் விவரம் கீழ்வருமாறு:–

| வ. எண் | ஆண்டு | மத்திய அரசின் பங்கு (ரூபாய் இலட்சத்தில்) | மாநில அரசின் பங்கு (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | 2006–2007 | 245.00 | 251.420 | 496.420 |
| 2. | 2007–2008 | 248.00 | 250.852 | 498.852 |
| 3. | 2008–2009 | 846.00 | 761.210 | 1607.210 |
| 4. | 2009–2010 | 356.00 | 286.560 | 642.560 |
| 5. | 2010–2011 | --- | --- | -- |
| 6. | 2011–2012 | --- | --- | -- |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | 2012–2013 | 1953.00 | 631.090 | 2584.090 |
| 8. | 2013–2014 | 7343.00 | 2447.660 | 9790.660 |
| 9. | 2014 -2015 | –– | –– | –– |
| 10. | 2015–2016 | –– | –– | –– |
| 11. | 2016–2017 | 5000.00 | 3380.65 | 8380.65 |
| 12. | 2017–2018 | –– | –– | –– |
| 13. | 2018–2019 | 609.00 | –– | 609.00 |
| 14. | 2019–2020 | 1500.00 | –– | 1500.00 |
| | மொத்தம் | **18100.00** | **8009.442** | **26109.442** |

## 14. பதினான்காவது நிதிக்குழுவின் பரிந்துரை

மத்திய அரசு, 14–வது நிதிக்குழுவின் கீழ் விரைவு நீதிமன்றங்கள், கூடுதல் நீதிமன்றங்கள், குடும்பநல நீதிமன்றங்கள், தற்பொழுதுள்ள நீதிமன்றங்களை மாற்றி வழக்காடும் மக்களுக்கு ஏற்ப அமைத்தல், மனித வளங்களை ஏற்படுத்துதல், தொழில்நுட்ப உதவி, ஆவணங்களை எண்ணியமயமாக்கல், மாற்று முறை தீர்வு மையம் மற்றும் மக்கள் நீதிமன்றங்களை அமைப்பதற்கு பரிந்துரை செய்துள்ளது. மேற்காணும் திட்டங்களுக்கான செலவினத்தை மத்திய அரசு, மாநில அரசுக்கென அதிகரித்துள்ள 10% வரி பகிர்விலிருந்து மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்துள்ளது.

இந்த செலவினங்களுக்காக தனியாக ஒதுக்கீடு எதுவும் 14–வது நிதிக்குழுவில் செய்யப்படவில்லை.

பதினான்காவது நிதிக்குழு பரிந்துரைப்படி கீழ்க்காணும் இனங்களுக்கு மாநில அரசின் நிதியிலிருந்து நிதி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்றத்திலுள்ள ஆவணங்களை எண்ணியமயமாக்குவதற்காக ரூ.37.00 கோடி நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதில் ரூ.10,58,44,472/– நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- தேனி , பரமக்குடி, ஆரணி, நாகர்கோயில், விழுப்புரம், பழனி, மேட்டூர், கும்பகோணம், வேலூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 10 இடங்களில் கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் (விரைவு நீதிமன்றங்கள்) அமைப்பதற்கு ரூ.5,86,39,990/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சென்னையில் கூடுதலாக நான்கு குடும்ப நல நீதிமன்றங்கள் அமைப்பதற்கு ரூ.3,14,94,288/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- உயர்நீதிமன்றம் மற்றும் சார்நிலை நீதிமன்றங்களில் **114** தொழில்நுட்ப பணியாளர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

- மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்திலுள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடங்களுக்கு சரிவுப்பாதை மற்றும் மின்தூக்கி அமைக்க ரூ.**1,31,92,650/–** ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- **15** குடும்ப நல நீதிமன்றங்கள் அமைப்பதற்கு ரூ.**19,46,36,880/–** ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- **2016–2017** முதல் **2019–2020** நிதியாண்டுகளில் நீதிபதிகளின் "பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு" திட்டத்திற்கென ரூ.**10.24** கோடி நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, ரூ.**2.56** கோடி நிதி ஒப்பளிப்பும் செய்யப்பட்டுள்ளது.

- மக்கள் நீதிமன்றம் நடத்துவதற்கென **2016–2017** முதல் **2019–2020** வரையிலான நிதியாண்டுகளில் ரூ.**5,50,00,000/–**க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, ரூ.**1,19,85,500/–** நிதி ஒப்பளிப்பும் செய்யப்பட்டுள்ளது.

- மாற்று தீர்வு, சமரசம் மற்றும் ஆலோசனை மையங்களின் (Alternative Disputes Resolution Centres) பயன்பாட்டிற்கு, **2016–2020** வரையிலான காலத்திற்கு ரூ.**19,70,00,000/–** நிர்வாக ஒப்புதலும் ரூ.**8,00,00,000/–** நிதி ஒப்பளிப்பும் செய்யப்பட்டுள்ளது.

- மாற்று தீர்வு மையங்களில் சமரசம் மற்றும் சமாதான (Incentives to Mediation and Conciliation) நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக சமரசம் செய்வோர் மற்றும் வழக்குரைஞர்களின் பயன்பாட்டிற்கு **2016–2020** வரையிலான ஆண்டுகளுக்கு ரூ.**12,08,00,000/–** நிர்வாக ஒப்புதலும், ரூ.**3,02,00,000/–** நிதி ஒப்பளிப்பும் செய்யப்பட்டுள்ளது.

- மாற்று தீர்வு மையங்களில் சமரச நடவடிக்கைகளில் ஈடுபடும் வழக்குரைஞர்கள் மற்றும் சமரசம் செய்வோர்களுக்கு பயிற்சி அளிக்க **2016–2020** வரையிலான ஆண்டுகளுக்கு ரூ.**3.06** கோடி நிர்வாக ஒப்புதலும், ரூ.**1.21** கோடி நிதி ஒப்பளிப்பும் செய்யப்பட்டுள்ளது.

- மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனு தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென கோயம்புத்தூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் தலா 2 வீதம் 4 நீதிமன்றங்கள் மற்றும் திருச்சி, திருப்பூர், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்று வீதம் மொத்தம் 8 சிறப்பு நீதிமன்றங்கள் ரூ.10,85,98,784/– செலவில் அமைப்பதற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 15. நீதிமன்ற மேலாளர்கள்

சென்னை உயர்நீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மற்றும் மாவட்ட நீதிமன்றங்களுக்கு 35 நீதிமன்ற மேலாளர் பதவிகள் 13–வது நிதிக்குழுவின் பிரிவுகளின் கீழ் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. நீதிமன்ற மேலாளர்களுக்கு உதவியாக உதவிப் பணியாளர்களை நியமித்துக் கொள்ள 13–வது நிதிக்குழுவின் மானியத்தின் ஒரு பகுதியை, பயன்படுத்திக் கொள்ள பரிந்துரைக்கப்பட்டது. நீதிமன்ற மேலாளர்களின் பதவிக்காலம் 31.03.2015–ல் முடிவடைந்த போதிலும், உயர்நீதிமன்றத்தின் வேண்டுகோளை ஏற்று 35 மேலாளர் பணியிடங்களுக்கு மேலும் நீட்டிப்பு

வழங்கப்பட்டுள்ளது. மாநில நிதியிலிருந்து நீதிமன்ற மேலாளர்களின் 23 உதவிப் பணியாளர்கள் பணியிடங்களுக்கும் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**16. நீதித்துறை அமைப்புகளை கணினிமயமாக்கும் திட்டம்**

**16.1** ஒருங்கிணைந்த கணினிமயமாக்கும் திட்டமானது, தேசிய கணினிமயமாக்கும் திட்டத்தின் கீழ் நாட்டில் உள்ள உயர்நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட / சார்நிலை நீதிமன்றங்களை கணினிமயமாக்கும் திட்டங்களில் ஒன்றாகும். இத்திட்டமானது, உச்சநீதிமன்றத்தின் மாண்புமிகு மின் செயற்குழுவின் (e-Committee) "இந்திய நீதித்துறையில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தினை நடைமுறைபடுத்தும் தேசிய கொள்கை மற்றும் செயல்திட்டம்–2005"–ஐ அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டதாகும். இத்திட்டத்திற்கு வழிகாட்டுதல் மற்றும் தேவையான உத்திகளை வழங்குவதற்காக மத்திய அரசின் நீதித்துறை செயலரின் தலைமையின் கீழ் ஒரு அதிகார குழு உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், தேசிய தகவல் மையத்தின் வாயிலாக நடைமுறைபடுத்தப்படுகிறது. புதுதில்லியிலுள்ள தேசிய தகவல் மையம், இத்திட்டத்தின்கீழ்

ரூ.4.18 கோடியை மூன்று தவணையாக வழங்கியுள்ளது. தகவல் தொழில் நுட்பம் (ம) தொலைத் தொடர்புகளை மாவட்ட, தாலுக்கா நீதிமன்றங்கள் மற்றும் கீழ்நிலை நீதிமன்றங்களில் செயல்படுத்துவதே கணினிமயமாக்கலின் முக்கிய குறிக்கோளாகும். விசாரணைக்காக பட்டியலிடப்படும் வழக்குகள், வழக்குகளின் தற்போதைய நிலை, ஆணைகள் மற்றும் தீர்ப்புகள் போன்ற தகவல்களை வழக்காடும் பொதுமக்கள், வழக்குரைஞர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் நீதிமன்ற வலைத்தளத்திலிருந்து பெறமுடியும்.

**16.2** இத்திட்டம், மடிக்கணினிகள், லேசர் அச்சுப்பொறிகள், நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற அலுவலர்களுக்கான பயிற்சி, நீதிபதிகளுக்கான இணையதள வசதிகள், நீதிமன்ற வளாகங்களுக்கான இணையதள இணைப்புகள், காணொலி ஒளிக்காட்சி கலந்துரையாடல் வசதி, இடம் தேர்வு, வன்பொருள், இணைய கட்டமைப்பு மற்றும் மென்பொருள் பயன்பாடு, தொழில்நுட்ப மனிதவளம், தகவல் தொழில் நுட்ப மற்றும் தொலை தொடர்புகளை தரம் உயர்த்துதல் ஆகிய முக்கிய அம்சங்களை கொண்டதாகும். இத்திட்டத்தின் குறிக்கோள்களாவன:–

❖ நீதிமன்றங்களில் தினந்தோறும் நடைபெறும் நீதிமன்ற நிருவாகத்தினை சிறப்பாக முறைப்படுத்த உதவுதல்.

❖ நிலுவையிலுள்ள வழக்குகளை குறைக்கும் பொருட்டு நீதிமன்ற நிருவாகத்திற்கு உதவுதல்

❖ வழக்கு தொடுப்பவர்களுக்கு வெளிப்படையான தகவல் அளித்தல்

❖ நீதிபதிகளுக்கு சட்டம் மற்றும் நீதித்துறை சார்ந்த தகவல்களை பெற வழிவகை செய்தல்.

**உயர்நீதிமன்றத்தில் கணினிமயமாக்கல் (சென்னை மற்றும் மதுரை கிளை)**

**16.3** அனைத்து நீதிபதிகளுக்கும் மடிக்கணினிகள், கணிப்பொறிகள், அச்சுப்பொறிகள் மற்றும் அகன்ற வலைதள இணைப்பு ஆகியவை அவர்களின் இல்ல அலுவலகங்கள் மற்றும் நீதிமன்ற அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. நீதிமன்ற வழக்குகளின் தற்போதைய நிலை, ஆணைகள் மற்றும் தீர்ப்புகள் பற்றிய தகவல்களை வழக்கு தொடுப்பவர்கள் மற்றும் வழக்குரைஞர்கள் ஆகியோர் பெறுவதற்கு உயர்நீதிமன்ற வலைதளம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

உயர்நீதிமன்றத்தின் அனைத்து பிரிவுகள் மற்றும் நீதிமன்ற அரங்குகள் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டுள்ள கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகள் போன்றவை குறும்பரப்பு வலையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன.

**16.4** சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரைக் கிளையில் பல்வேறு இடங்களில் தொடுதிரைகள் பொருத்தப்பட்டுள்ளன.

**16.5** நவீன கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய காட்சிப்பலகை வாங்கப்பட்டு, அவை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரைக் கிளையில் உள்ள பல்வேறு நீதிமன்ற அரங்குகளில் பொருத்தப்பட்டுள்ளன.

**16.6** சென்னை உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள சென்னை வழக்குரைஞர் கழகம், சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர்கள் சங்கம் மற்றும் மகளிர் வழக்குரைஞர்கள் சங்கக் கட்டடங்களில் உயர்நீதிமன்றத்தால் ரூ.**10,07,782/–** செலவில் காட்சிப்பலகைகள் வாங்கப்பட்டு பொருத்தப்பட்டுள்ளன.

**16.7** குடிமக்கள் சார்ந்த சேவையாக HCMDRS (hcmad.auth, courts-madurai.sms, courts-tn.sms) என்ற அனுப்புனர் குறியீடு மூலமாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை கிளை, சார்நிலை நீதிமன்றங்களின் பதிவு செய்யப்பட்ட செல்லிடப்பேசி பயனாளிகளுக்கு வழக்கு விவரப்பட்டியல் மற்றும் வழக்கு தொடர்பான தகவல்கள் குறுந்தகவலாக அனுப்பப்பட்டு வருகிறது.

**சார்நிலை நீதிமன்றங்களை கணினிமயமாக்கல்**

**16.8** மாநிலத்தில் உள்ள அனைத்து நீதிமன்ற வளாகங்களிலும் தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN)–**8** MBPS இணைப்பு வசதி வழங்குவதற்கு நிர்வாக ஒப்பளிப்பாக ரூ**37.00** கோடியும், வன்பொருள்கள் பொருத்துவதற்காக ரூ.**11.80** கோடி நிதி ஒப்பளிப்பும் இம்மாநில அரசால் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு பெரும்பரப்பு வலை அமைப்பு வசதி (TNSWAN), தமிழ்நாடு மின்னணு கழகத்தால் (ELCOT), **250** நீதிமன்ற வளாகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**16.9** மாவட்ட தலைமையிடங்களில் இயங்கிவரும் **310** நீதிமன்றங்களில் உள்ள பழைய கணினி மற்றும் அதன்

சாதனங்களுக்கு பதிலாக புதிய கணினி மற்றும் அதன் சாதனங்கள் வாங்குவதற்கு ரூ.9.00 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**16.10** காணொலி ஒளிக்காட்சி கலந்துரையாடல் வசதியினை நடைமுறைப்படுத்துவதற்கு, 2018–2019–ஆம் நிதியாண்டில் ரூ.11,41,52,345/– ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள், தமிழ்நாடு மின்னணு கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு அனைத்து பகுதிகளிலும் முடிவடைந்துள்ளன. 33 மாவட்ட நீதிமன்ற வளாகங்கள், சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை ஆகியவற்றில், காணொலி ஒளிக்காட்சி கலந்துரையாடல் வசதி மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களால் 23.01.2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது. அடுத்த கட்டமாக, இவ்வசதியினை நடைமுறைப்படுத்தும் பணிகள் 116 நீதிமன்ற வளாகங்களில் தமிழ்நாடு மின்னணு கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**16.11** அனைத்து நீதித்துறை அலுவலர்களுக்கும் மடிக்கணினிகள், லேசர் அச்சுப்பொறிகள் மற்றும் அகன்ற

வலைதள இணைப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. 42 மாவட்ட நீதிமன்ற வளாகங்களுக்கு லீஸ்டு லைன் இணைப்பு மற்றும் அனைத்து நீதித்துறை அலுவலர்களுக்கும் தனியான அடையாள எண் கொடுக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களுக்கும் கணிப்பொறி தொழில்நுட்ப பணிக்கென ஒரு கணிப்பொறி அலுவலர் மற்றும் இரு கணிப்பொறி உதவியாளர்கள் வழங்கப்பட்டுள்ளனர். கணினி வன்பொருள் அனைத்து நீதிமன்றங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

**17. உரிமையியல் நீதிபதிகள் நியமனம்**

2014–2015 முதல் 2016–2017 வரையிலான ஆண்டுகளில் உரிமையியல் நீதிபதி பணியிடத்தில் ஏற்பட்டுள்ள ஏராளமான காலிப்பணியிடங்களில் தமிழ்நாடு நீதித்துறை பணிகளுக்குட்பட்ட 220 உரிமையியல் நீதிபதி பணியிடங்கள், நேரடி நியமனம் மூலம் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 2018–2019–ஆம் ஆண்டு நிரப்பப்பட்டுள்ளன.

- ரூ.2,23,52,919/– செலவினத்தில் (அதாவது தொடர் செலவினமாக ரூ.1,68,31,704/– தொடராச் செலவினமாக ரூ.55,21,215/–), மாவட்ட நீதிபதி

தரத்தில் ஓர் பதிவாளர் (ஆய்வு) பணியிடம், மாவட்ட நீதிபதி தரத்தில் (நுழைவு நிலை) ஓர் கூடுதல் பதிவாளர் (ஆய்வு) பணியிடம், **19** உதவிப் பணியாளர் பணியிடங்கள் மற்றும் பிற உள்கட்டமைப்பு வசதிகளும் ஆய்வுத்துறைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் ஆளுகைக்குட்பட்ட பணியிடங்களான தமிழ்நாடு மாநில நீதித்துறை பணியிடங்களுக்குட்பட்ட உரிமையியல் நீதிபதி பணியிடம் மற்றும் தமிழ்நாடு அமைச்சுப்பணிகளுக்குட்பட்ட இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடங்கள் தவிர, நீதித்துறை பணிகளுக்குட்பட்ட பிற பணியாளர்களை நியமனம் செய்வதற்கு உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்களின்படி "நீதித்துறை ஆள் எடுப்புப் பிரிவு" ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. **34** கூடுதல் பணியிடங்கள், உள்கட்டமைப்பு மற்றும் பிற அடிப்படை வசதிகளுடனான "நீதித்துறை ஆள் எடுப்புப் பிரிவு'' உருவாக்குவதற்கு **ரூ.5,87,90,889/–** அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. ஒரு தனிப்பட்ட ஆள் எடுப்பு செயல்முறைக்கென **ரூ.30,00,000/–** ஒப்பளிப்பு

செய்யப்பட்டுள்ளது. மேலும், நீதித்துறை ஆள் எடுப்புப் பிரிவிற்கான ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம் (Annual Maintenance Contract) முடிவடைந்தவுடன் அதற்காக ரூ.8,00,000/– ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை நீதிமன்ற நீதிபதிகளின் சட்ட எழுத்தர்களுக்கு (Law Clerks) வழங்கப்பட்டு வந்த மாத மதிப்பூதியம் ரூ.15,000/–லிருந்து ரூ.30,000/–ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.

## 18. நீதித்துறை பயிற்சிக் கழகம்

**18.1** சென்னை உயர்நீதிமன்றத்தின் நிருவாக கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தமிழ்நாடு மாநில நீதித்துறை பயிற்சிக் கழகம் **23.04.2001** அன்று நிறுவப்பட்டது. இப்பயிற்சிக் கழகத்தின் நோக்கமானது, மாவட்ட நீதிபதிகள், முதுநிலை உரிமையியல் நீதிபதிகள், உரிமையியல் நீதிபதிகள், நீதித்துறைப் பணியாளர்கள் மற்றும் புதியதாக பணி நியமனம் செய்யப்படும் நீதிபதிகள் போன்ற நீதித்துறை அலுவலர்களுக்கு, வளர்ந்து வரும் சட்டம், சமூகம் மற்றும்

தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப பணித்திறனை வளர்த்துக் கொள்ள ஏதுவாக பயிற்சி வழங்குவது ஆகும்.

**18.2** சென்னை தலைமையிடத்தில் இயங்கி வரும் நீதித்துறை பயிற்சிக் கழகத்திற்கு “புத்தகச் செலவினங்கள்” என்ற கணக்குத் தலைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள நிலையான ஒப்பளிப்பினை **ரூ.75,000/–**லிருந்து **ரூ.1,25,000/–** ஆக உயர்த்தியும், கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் இயங்கி வரும் நீதித்துறை பயிற்சிக் கழகத்தின் மண்டல நிலையங்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிலையான ஒப்பளிப்பினை **ரூ.1,00,000/–** லிருந்து **ரூ.1,25,000/–** ஆக உயர்த்தி அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

## 19. உயர்நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழ்மொழியை பயன்படுத்துதல்

இந்தியாவில் நான்கு மாநிலங்களின் உயர்நீதிமன்றங்களில் அந்தந்த மாநில மொழியே பயன்பாட்டில் உள்ளது. ஆனால், சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ்மொழியை அலுவல் மொழியாக பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை **11.10.2012** அன்று நடந்த உச்சநீதிமன்ற முழு நீதிமன்ற கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனினும், இது இம்மாநிலத்தின் நீண்ட நாள் கோரிக்கை மற்றும்

விருப்பமாக இருப்பதால், இக்கோரிக்கையை மறுபரிசீலனை செய்யுமாறு மத்திய அரசை இவ்வரசு மீண்டும் வலியுறுத்தியது.

**20. நீதித்துறை முத்திரைத்தாள் மின்னணுமயமாக்கல்**

**20.1** நீதித்துறையில் மின்னணு ஆளுமை முறைகளை அறிமுகப்படுத்துவதன் அவசியத்தையும், அதனால் மக்களுக்கு ஏற்படும் நன்மைகளை கருத்தில் கொண்டும், உயர்நீதிமன்றத்தின் பரிந்துரையின் அடிப்படையில், நீதித்துறையில் முழுமையாக மின்னணு ஆளுமை முறைகளைக் கொண்டு வர ஏதுவாக, நீதிமன்றங்களில் நீதிசார்ந்த மின்னணு முத்திரைத்தாள் முறையானது **20.04.2018** முதல் முதற்கட்டமாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற மதுரை கிளையிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக அனைத்து முதன்மை மாவட்ட நீதிமன்றங்களிலும் இது செயல்படுத்தப்பட உள்ளது. நீதிசார்ந்த மின்னணு முத்திரையை பொதுமக்கள் தாங்களாகவே இணையம் மூலம் உருவாக்கி பயன்படுத்தலாம். இத்திட்டத்தை செயல்படுத்த, திருவாளர்கள் ஸ்டாக் ஹோல்டிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. கணினி மற்றும்

இணைய மையங்களில் அல்லது நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளிலும் உரிய விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து தொகையினை செலுத்தி, நீதிசார்ந்த மின்னணு முத்திரைகளை பெற்றுக் கொள்ளலாம்.

**20.2** நீதி சார்ந்த மின்னணு முத்திரைத்தாள் முறையினை, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரைக் கிளையில் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக, **20.04.2018** முதல் **31.03.2019** வரையிலான காலத்திற்கு **2,09,401** ரசீதுகள் எடுக்கப்பட்டு ரூ.**21.25** கோடி மதிப்பிலான நீதி சார்ந்த மின்னணு முத்திரைத் தாள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**20.3** தற்பொழுது, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரைக் கிளையின் வளாகங்களில் இதற்கென அமைக்கப்பட்டுள்ள முகப்பின் (counter) வாயிலாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கென நீதிசாரா மின்னணு முத்திரைத் தாள்கள் விற்பனை செய்வதற்கு திருவாளர்கள் ஸ்டாக் ஹோல்டிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

## 21. தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதி

வழக்குரைஞர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, பணியில் இருக்கும்போது மரணமடையும் வழக்குரைஞர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நலநிதியை ரூ.5.25 இலட்சத்திலிருந்து ரூ.7.00 இலட்சமாக அரசு உயர்த்தியுள்ளது. மேலும், தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த நிதியுதவியை ரூ.4.00 கோடியிலிருந்து ரூ.8.00 கோடியாகவும் அரசு உயர்த்தியுள்ளது.

## 22. தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதி

வழக்குரைஞர்களின் எழுத்தர்களுடைய நலன் கருதி இறந்த வழக்குரைஞர்களின் எழுத்தர்களின் நியமனதாரர்களுக்கு / அவரை சார்ந்தவர்களுக்கு, தமிழ்நாடு வழக்குரைஞர்கள் எழுத்தர்கள் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டு வந்த நிதி உதவி ரூ.50,000/–லிருந்து ரூ.2.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

## 23. நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள்

நீதிமன்றங்களுக்கு புதிய கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகளுக்கென ரூ.**1086.83** கோடி **2011–2012** முதல் **2018–2019** வரையிலான காலத்திற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது. **2018–2019**–ஆம் ஆண்டில் நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ரூ.**125.15** கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- உயர்நீதிமன்ற வளாகம் மற்றும் மாநிலத்திலுள்ள சார்நிலை நீதித்துறையில் உள்ள நீதிமன்ற அரங்குகள் மற்றும் நீதிபதிகளின் குடியிருப்புகளில் பிற அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதற்கு ரூ.**405.21** இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- மாநிலத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கென ரூ.**2693.62** இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**24. புதிய நீதிமன்றங்கள்**

**2011–2012** முதல் **2018–2019–**ஆம் ஆண்டுகள் வரை **456** புதிய நீதிமன்றங்கள் ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

**25. ஒப்பளிக்கப்பட்ட பிற வசதிகள் (2018–2019)**

- சென்னை உயர்நீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மற்றும் சார்நிலை நீதிமன்றங்களுக்கு நகல் எடுக்கும் இயந்திரம், நிகரி, EPABX போர்டுகள் மின்னணு தகவல் பலகை, இயந்திர துடைப்பான், உயிரியளவு கருவிகள் (Bio-Metric Machines) மற்றும் மெய்நிகர் இயந்திரம் (Virtual Machine), வாங்குவதற்கு ரூ.**363.42** இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் நீதிபதிகள் மற்றும் சார்நிலை நீதிபதிகள் ஆகியோருக்கு மகிழுந்து வாங்கவும், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் கோப்புகளை எடுத்துச் செல்ல வேன் ஒன்று

வாங்குவதற்காக **ரூ.182.33** இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- புதியதாக கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்களில் குறும்பரப்பு வலையமைப்பு (Local Area Network) வசதி ஏற்படுத்துதல் மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்ட மற்றும் தாலுக்கா நீதிமன்ற வளாகங்களில் தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) ஏற்படுத்துதல், அகன்ற அலைவரிசை இணைப்பு ஏற்படுத்துதல், சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையின் நீதிபதிகள் மற்றும் சார்நிலை நீதிமன்றங்களுக்கு தொலைபேசி இணைப்புடன் கூடிய நிகரி வசதி வழங்குவதற்கும் நேரடி தொலைபேசி வசதி போன்றவை ஏற்படுத்துவதற்கும் **ரூ.804.75** இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மற்றும் சார் நிலை நீதிமன்றங்களுக்கு இரும்பு அடுக்குத் தட்டுகள் மற்றும் அறைகலன்கள் வாங்குவதற்கு **ரூ.127.95** இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர் சங்கம் மற்றும் 32 மாவட்டங்களில் உள்ள வழக்குரைஞர் சங்கங்களுக்கு சட்டப் புத்தகங்கள் மற்றும் புத்தக அடுக்குத் தட்டுகள் வாங்குவதற்கு ரூ.100.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 26. தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு

**நோக்கம்**

**26.1** சட்டப் பணிகள் ஆணைக் குழு (1994–ஆம் ஆண்டின் சட்டம் 59–ல் திருத்தியமைக்கப்பட்டது) சட்டம், 1987, சமுதாயத்தில் மிகவும் நலிவடைந்த பிரிவினருக்கு இலவசமாக, சட்டம் சார்ந்த சேவைப் பணிகளை வழங்கவும், பொருளாதார அல்லது ஏனைய இயலாமைகள் காரணமாக எந்த ஒரு குடிமகனுக்கும் நீதி கிடைப்பதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படக்கூடாது என்பதை உறுதி செய்வதற்கும், தகராறுகளுக்குத் தீர்வு காணும் ஒரு மாற்று அமைப்பாக மக்கள் நீதிமன்றங்களை சட்டப்பூர்வமாக ஏற்படுத்துவதற்கும், சமுதாயத்தில் ஏழை எளிய மக்களுக்கு அவர்களுடைய உரிமைகள் குறித்து பயிற்றுவிக்கவும், சமூக நலன் குறித்த பல்வேறு சட்டங்கள் மற்றும் நிருவாக ஆணைகளின்படி

அவர்களுக்குண்டான பயன்கள் மற்றும் சலுகைகளைப் பெற வழிவகை செய்யவும் இயற்றப்பட்டது. மேற்குறிப்பிட்ட பணிகளை செயல்படுத்த மாநில சட்டப் பணி ஆணைக்குழு, மாவட்டசட்டப்பணி ஆணைக்குழுக்கள், வட்ட சட்டப்பணி குழுக்கள் மற்றும் உயர்நீதிமன்ற சட்டப்பணி குழுக்கள் ஆகியவை அமைக்க இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**அமைப்பு**

**26.2** மேற்கண்ட சட்டத்திற்கு இணங்க, மாநில அளவில் தமிழ்நாடு மாநில சட்டப்பணி ஆணைக்குழு மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட சட்டப்பணி ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் எங்கெல்லாம் நீதிமன்றங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் வட்ட சட்டப்பணி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. உயர்நீதிமன்ற சட்டப் பணி குழுவும் மாநில சட்டப்பணி ஆணைக்குழுவால் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது 32 மாவட்ட சட்டப் பணி ஆணைக்குழுக்களும், 150 வட்ட சட்டப் பணி குழுக்களும்

மற்றும் **2** உயர்நீதிமன்ற சட்டப் பணி குழுக்களும் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

**சட்ட உதவி பெற தகுதியுடையோர்**

**26.3** சட்டப்பணி ஆணைக்குழு சட்டம், **1987**, பிரிவு **12–**ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் நபர்கள் வழக்கு தொடுக்கவும், எதிர்த்து வழக்காடவும் சட்ட உதவி பெறவும் தகுதியுடையவர்களாவர்:–

(i) ஆதிதிராவிடர் (அல்லது) பழங்குடியினர்

(ii) அரசியலமைப்பு சட்டப்பிரிவு **23-ல்** குறிப்பிடப்பட்டுள்ளவாறு மனிதர்களை விற்பது, வாங்குவது, வற்புறுத்தி வேலை வாங்குவது ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட நபர் (அல்லது) பிச்சை எடுப்பவர்கள்

(iii) பெண் (அல்லது) குழந்தை

(iv) மாற்று திறனாளிகள்

(v) பேரிடர்கள், இன வன்முறை, சாதி வன்கொடுமை, வெள்ளம், பஞ்சம், நில அதிர்ச்சி, தொழிற்சாலை

பேரழிவு ஆகியவற்றால் பாதிப்பிற்கு உள்ளானவர்கள்

(vi) தொழிற்சாலை தொழிலாளர்கள்

(vii) சிறைக் காவலில் இருப்போர், பாதுகாப்பு இல்லம், இளம் குற்றவாளிகள் இல்லம், மன நல மருத்துவமனை அல்லது மனநல காப்பகம் இவைகளில் காவலில் உள்ளவர்கள்

(viii) சட்டப்பணி ஆணைக்குழு சட்டம், 1987, பிரிவு 12(எச்)—ல் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்திர வருமானத்திற்குட்பட்டவர்கள். இலவச சட்ட உதவி பெறுவோருக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த ஆண்டு வருமானம் ரூ.1,00,000/—லிருந்து ரூ.3,00,000/— ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

சட்ட உதவி வேண்டுபவர்கள் எவ்வித நீதிமன்றக் கட்டண வில்லை இல்லாமல் தங்கள் கோரிக்கைகளை மனு வடிவில் அளிக்கலாம். எழுத்தறிவில்லாதவர்கள் வாய் மொழியாக தங்கள் கோரிக்கைகளை அளிக்கலாம். அவை சட்டப் பணிகள் ஆணைக்குழு அலுவலரால் அல்லது குழுவால் மேல் நடவடிக்கைக்காக பதிவு செய்து கொள்ளப்படும்.

**ஆலோசனை மற்றும் சமரச மையம்**

**26.4** மாநிலத்தில், ஆலோசனை மற்றும் சமரச மையங்கள் வழக்குகளை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லாமலே உடன்பாடு காண ஒரு கருவியாக இயங்கி வருகின்றன. ஆலோசனை வழங்கும் வழக்குரைஞர் இருதரப்பினருக்கும் இடையே உள்ள பிரச்சனைகளுக்கு சுமூக தீர்வு காண்பதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறார். இவ்வாறு, பிரச்சனைகளை அடிப்படையிலேயே தீர்த்து வைக்கின்ற ஒரு மாற்று முறை தீர்வு அமைப்பாக இம்மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

**மகளிருக்கான மையங்கள்**

**26.5** சமூகத்தின் நலிந்த பிரிவினரான பெண்களுக்கு அவர்களின் திருமணம் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் இதர பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு மகளிருக்கான மையங்கள் மூலம் உதவிகள் வழங்க முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

**சட்டம் சார்ந்த உதவிகள்**

**26.6** குற்ற வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் சட்ட உதவிகள் பெறுவதற்கும், மோட்டார் வாகன விபத்துகளில்

பாதிக்கப்பட்டவர்கள் உரிய இழப்பீடு பெறுவதற்கும் மற்றும் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் அரசால் அளிக்கப்படும் சமூக நலத்திட்டங்களான முதியோர் ஓய்வூதியம், விதவைகள் ஓய்வூதியம் போன்ற உதவிகளை அரசிடமிருந்து பெறுவதற்கும், சட்டப்பணி ஆணைக் குழுக்கள் இலவசமாக சட்ட உதவிகள் வழங்குகின்றன.

**மக்கள் நீதிமன்றம்**

**26.7** எந்த ஒரு நீதிமன்றத்திலும் நிலுவையிலுள்ள வழக்கையோ அல்லது அந்த நீதிமன்ற அதிகார வரம்புக்குள் வருகின்ற ஆனால் வழக்காகத் தாக்கல் செய்யப்படாத எந்த பொருள் பற்றியும் அதில் சம்மந்தப்பட்ட தரப்பினர்களுக்கிடையே ஒரு உடன்பாடு அல்லது தீர்வு எட்டுவதற்கு மக்கள் நீதிமன்றங்கள் உதவி செய்கின்றன.

**சட்ட உதவி முகாம் மற்றும் சட்ட அறிவு விளக்க முகாம்**

**26.8** ஊரகப் பகுதிகளில் சட்ட உதவி முகாம் மற்றும் சட்ட அறிவு விளக்க முகாம்கள் குறிப்பிட்ட காலமுறைப்படி நடத்தப்படுகின்றன. வருவாய்த்துறை, காவல்துறை மற்றும் பிற துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் இந்த முகாம்களில் கலந்துகொள்ள அழைக்கப்படுகிறார்கள்.

சட்டப்பணி ஆணைக்குழுவால் அனுப்பிவைக்கப்படும் வழக்குரைஞர்களும் இம்முகாமில் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்கள் பெறுவதோடு, மனுக்கள் மீது சட்ட ஆலோசனைகளையும் வழங்குகிறார்கள். மனுதாரர்களின் மனுக்கள், இம்முகாம்களில் கலந்து கொண்ட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களை கொண்டு பரிசீலனை செய்யப்பட்டு முடியுமானால் அந்த இடத்திலேயே உடனடித் தீர்வு காணப்படுகிறது.

**மத்திய சிறைச்சாலைகளில் சட்ட உதவி மையம் மற்றும் மக்கள் சிறை நீதிமன்றம்**

**26.9** சட்ட உதவி மையம் மற்றும் மக்கள் சிறை நீதிமன்றங்கள், சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், கடலூர், சேலம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் மத்திய சிறைகளிலும் மற்றும் வேலூரில் உள்ள பெண்கள் தனிச்சிறையிலும் செயல்பட்டு வருகின்றன. சென்னை புழலிலுள்ள மத்தியச் சிறைச்சாலையில் ஒரு சட்ட உதவி மையம் இயங்கி வருகிறது. சிறை நீதிமன்றம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறுகிறது. சிறை சட்ட உதவி மையங்களில் சிறைவாசிகளிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு அவை சட்ட உதவி மையங்களில் உள்ள உரிய பதிவேடுகளில்

பதியப்பட்டு அவற்றின்மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. **31.03.2019** வரை **3,826** மக்கள் சிறை நீதிமன்றங்கள் நடத்தப்பட்டு **22129** வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன.

### ஓய்வூதியருக்கான மக்கள் நீதிமன்றம்

**26.10** ஓய்வூதியருக்கான மக்கள், நீதிமன்றம் தமிழ்நாடு மாநில சட்ட பணிகள் ஆணைக்குழுவால் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் பல்வேறு அரசுத் துறைகளிலிருந்து ஓய்வு பெற்றவர்களின் தாவாக்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு தீர்க்கப்பட்டு வருகின்றன. இதற்கு சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி தலைவராகவும் மற்றும் இரண்டு உறுப்பினர்களும் உள்ளனர். **31.03.2019** வரை **249** ஓய்வூதியருக்கான மக்கள் நீதிமன்றம் நடைபெற்றுள்ளது. இதில் **1294** குறைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

### சட்ட உதவி வழக்குரைஞர் திட்டம்

**26.11** இத்திட்டத்தின்படி, குற்றவியல் நீதிமன்ற நடுவரின் முன்பாக காவலில் வைப்பதற்கு ஆஜர்படுத்தப்படும் நபர்கள் வழக்குரைஞர்கள் வைத்துக்கொள்ள வசதியற்றவர்களாக இருப்பின், அவர்களுக்கு சட்ட

உதவி அளிக்க சட்டப்பணி ஆணைக்குழு மூலம் வழக்குரைஞர்கள் குற்றவியல் நீதிமன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். மாநில சட்டப்பணி ஆணைக்குழு இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. காவலில் உள்ள நபர்களுக்கு பின்வரும் மூன்று நிலைகளில் இந்த திட்டம் முக்கியத்துவம் அளிக்கிறது:

i. காவலில் உள்ளவர்கள் பிணையில் வெளிவருவதற்கும் மீண்டும் காவலில் வைப்பதற்கான ஆணையை எதிர்ப்பதற்கும் உதவுகிறது

ii. காவலில் உள்ளவர்கள் வழக்கை எதிர்கொள்வதற்கான சட்ட உதவி

iii. பாதகமான உத்தரவுகளை எதிர்த்து மேல் முறையீடு மற்றும் மறு ஆய்வு செய்வதற்கான சட்ட உதவி

**மாற்றுத் தீர்வு மையங்கள்**

**26.12** உரிமையியல் நடைமுறை விதிகள் தொகுப்புப் பிரிவு **89**–ன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும், மாற்று முறை தீர்வு மையங்கள் அமைக்கப்பட்டு, சமரச நடவடிக்கைகள், மக்கள் நீதிமன்றங்கள் மற்றும் பிற மாற்று முறை தீர்வுகளுக்கு

இணைப்பு பாலமாக செயல்படுகின்றன. சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் மாற்றுத் தீர்வு மையக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.4.20 கோடியும், மீதமுள்ள 29 நீதித்துறை மாவட்டங்களில் மாற்றுத் தீர்வு மையக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.29.00 கோடியும் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. தற்பொழுது, சென்னை, வேலூர், கிருஷ்ணகிரி, சேலம், தேனி, திருவாரூர், திண்டுக்கல், மதுரை, நாமக்கல், கடலூர், இராமநாதபுரம், திருச்சி, விழுப்புரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டு, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருவள்ளூர், ஸ்ரீவில்லிபுத்தூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், ஈரோடு, தஞ்சாவூர், சிவகங்கை நீலகிரி, கோயம்புத்தூர், கரூர், புதுக்கோட்டை மற்றும் தருமபுரி ஆகிய 30 மாவட்டங்களில் இம்மையங்கள் துவங்கப்பட்டுள்ளன.

**நிரந்தர மக்கள் நீதிமன்றம்**

**26.13** சட்டப்பணி ஆணைக்குழு சட்டம், **1987**, பிரிவு **22**பி–ன்படி, நிரந்தர மக்கள் நீதிமன்றங்கள் **32** மாவட்டங்களில் ரூ.**7,70,70,784/-** செலவினத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**தேசிய மாபெரும் மக்கள் நீதிமன்றம்**

**26.14** தேசிய அளவிலான மக்கள் நீதிமன்றம் நாடு முழுவதும், உச்சநீதிமன்றம் முதல் வட்ட அளவிலான நீதிமன்றம் வரை அனைத்து நீதிமன்றங்களிலும் நடைபெறுகிறது.

தேசிய அளவிலான மக்கள் நீதிமன்றம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது. **2018–2019–**ஆம் ஆண்டில் ஆறு முறை நடைபெற்றுள்ளது. கடைசியாக **09.03.2019** அன்று நடைபெற்றுள்ளது. அதில் **5,64,325** வழக்குகள் முடிக்கப்பட்டு தீர்வுத் தொகையான ரூ.**21,86,89,00,267/–** பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**சென்னை தொலைக்காட்சியில் "நீதிமன்ற செய்திகள்"**

**26.15** தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் குழுவால் நீதிமன்ற செய்திகள் என்ற **25** நிமிட நிகழ்ச்சி **30.09.2007** முதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை **7.30** மணிக்கு ஒளிபரப்பப்பட்டு வந்தது. தற்போது இந்த நிகழ்ச்சி ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை **10.30** மணிக்கு ஒளிபரப்பப்பட்டு வருகிறது.

**சட்டத்தின் குரல்**

**26.16** சட்டத்தின் குரல் என்ற சட்ட விழிப்புணர்வு தொடர் நிகழ்ச்சியை தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் குழு சென்னை அகில இந்திய வானொலியுடன் இணைந்து **15.02.2015** முதல் சென்னையின் முதல் அலைவரிசையில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை **8.30** மணிக்கு ஒலிபரப்பி வருகின்றது.

**தொலைபேசி வழி சட்ட உதவி**

**26.17** சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநில சட்டப்பணி ஆணைக்குழுவின் சட்ட உதவி மையக் கட்டடத்தில் சட்ட உதவி மையம் ஒன்று தொலைபேசி வழி சட்ட உதவி அளிக்கும் பொருட்டு இயங்கி வருகின்றது. இம்மையத்திற்கு, சுழற்சி முறையில் காலை மற்றும் மாலை இருவேளையும், அனைத்து வேலை நாட்களிலும், வழக்குரைஞர்கள் அனுப்பி வைக்கப்பட்டு பொதுமக்களின் சட்டம் சார்ந்த பிரச்சனைகளுக்கு தொலைபேசி வாயிலாக தக்க ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்குகின்றனர். சட்ட உதவி கோரும் பொதுமக்கள் **044–25342441** என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். வழக்காடும் பொது மக்கள் தொடர்பு

கொள்ள ஏதுவாக இலவச எண் **1800–4252–441** பயன்பாட்டில் உள்ளது.

## 27. அரசு வழக்காடும் துறை, உயர்நீதிமன்றம், சென்னை

**27.1** அரசு வழக்காடும் துறை, சென்னை உயர்நீதிமன்றத்தில் **1997**–ஆம் ஆண்டு மாநில தலைமை அரசு வழக்குரைஞரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் அமைக்கப்பட்டது. மாநில அரசின் கூடுதல் தலைமை வழக்குரைஞர்கள் I II IV V VI VII மற்றும் VIII சென்னை உயர்நீதிமன்றத்தின் அரசு குற்றவியல் வழக்கு நடத்துனர், அரசு வழக்குரைஞர் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையின் கூடுதல் அரசு குற்றவியல் வழக்கு நடத்துனர் மற்றும் அரசு சிறப்பு வழக்குரைஞர் மற்றும் அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர் III சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை ஆகியோரின் கீழ் இயங்கும் பகுதி அலுவலகங்கள் மாநில தலைமை அரசு வழக்குரைஞரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன. ஒரு கூடுதல் தலைமை அரசு வழக்குரைஞர் உச்சநீதிமன்றத்தில் மாநில அரசின் சார்பாக வழக்குகளை வாதாட நியமிக்கப்பட்டுள்ளார்.

**27.2** சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்காடும் துறையில் மேற்கண்ட **13** பிரிவு அலுவலகங்களில் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை நடத்திட **230** சட்ட அலுவலர்களும், **305** அமைச்சுப் பணியாளர்களும் பணிபுரிகின்றனர்.

**இதர வசதிகள்**

**27.3** தலைமை அரசு வழக்குரைஞர், குற்றவியல் அரசு வழக்குரைஞர் மற்றும் அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர்களின் பயன்பாட்டிற்கு மகிழுந்துகள் வாங்குவதற்காக **2018–2019**–ஆம் ஆண்டில் ரூ.**73.95** இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**28. குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்**

**28.1** குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககத்தின் முக்கிய குறிக்கோள், மாநிலத்திலுள்ள தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட குற்ற வழக்குகளை முழு கட்டுப்பாட்டுடன் திறம்பட நடத்துவதும், மேற்காணும் நீதிமன்றங்களின் அரசு குற்ற வழக்கு நடத்துனர்கள் பணிகளை கண்காணிப்பதும் ஆகும்.

## குற்ற வழக்கு தொடர்வுத் துறையின் நிர்வாக அமைப்பு

**28.2** குற்ற வழக்கு தொடர்வு இயக்ககம் குற்ற வழக்குத் தொடர்வுத்துறை இயக்குநரின் நிர்வாகக்கட்டுப்பாட்டின் கீழ் சென்னையில் இயங்கி வருகிறது. குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநரின் நிர்வாகப் பொறுப்புகளில் உதவி புரிந்திட, ஒரு இணை இயக்குநர் (நிர்வாகம்) தலைமையிடத்தில் உள்ளார். மேலும், மண்டல அளவில் நிர்வாகத் தலைவர்களாக **11** துணை இயக்குநர்களும், மாவட்ட அளவில் நிர்வாக தலைவர்களாக **14** உதவி இயக்குநர்களும் உள்ளனர். ஒரு உதவி இயக்குநர் அரசு வழக்கு நடத்துனர்களின் பயன்பாட்டிற்கென வெளியிடப்படும் "தமிழ்நாடு குற்ற வழக்கு நடத்துனர் மாதாந்திர இதழ்" பதிப்பிற்கான வேலையை கவனிப்பதற்காக இணை இதழாசிரியராக தலைமையிடத்தில் உள்ளார். இவர்களைத்தவிர **31** அரசு கூடுதல் வழக்கு நடத்துனர்களும் , **96** அரசு உதவி வழக்கு நடத்துனர்கள் நிலை–I, **193** அரசு உதவி வழக்கு நடத்துனர்கள் நிலை–II இத்துறையில் உள்ளனர். அரசு கூடுதல் வழக்கு நடத்துனர்கள்/ அரசு உதவி வழக்கு நடத்துனர்கள் நிலை–I / அரசு உதவி வழக்கு நடத்துனர்கள் நிலை–II ஆகியோர் முறையே தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் / மாவட்ட உரிமையியல் மற்றும்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் / குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களில் வழக்குகளை நடத்துகின்றனர்.

**28.3** இது தவிர, **5** துணை இயக்குநர்கள், **36** கூடுதல் அரசு வழக்கு நடத்துனர்கள், **25** அரசு உதவி வழக்கு நடத்துனர்கள் நிலை–**1** மற்றும் **13** அரசு உதவி வழக்கு நடத்துனர்கள் நிலை–**2** ஆகியோர் அயற்பணியில் விழிப்புப்பணி, காவல்துறை, சிறைத்துறை, பொது சுகாதாரம், விவசாயத்துறை, மருந்துக்கட்டுப்பாடு, விதைச்சான்று இயக்குநரகம் ஆகியவற்றில் சட்ட ஆலோசகர்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

**தமிழ்நாடு அரசு குற்ற வழக்கு நடத்துனர் மாத இதழ்**

**28.4** மூன்றாவது காவல் ஆணைய பரிந்துரையின்படி, தமிழ்நாடு அரசு குற்ற வழக்கு நடத்துனர்களின் மாத இதழ் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது. இதில், உச்சநீதிமன்றம் மற்றும் அனைத்து மாநிலங்களிலுள்ள உயர்நீதிமன்றங்களின் முக்கியமான தீர்ப்புகள் வெளியிடப்படுகின்றன. இது அரசு வழக்கு நடத்துனர்களுக்கு குற்றவியல் வழக்குகளை நடத்த பெரும் உதவியாக உள்ளது. தலைமை அலுவலகத்திலும் மண்டல மற்றும் மாவட்ட தலைமை அலுவலகத்திலும் சட்ட

நூல்கள் அடங்கிய நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**வழக்கு நடத்துனருக்கான பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு**

**28.5** மத்திய அரசின் **14–**வது நிதி ஆணையம், தமிழ்நாடு அரசு குற்ற வழக்கு நடத்துனர்களுக்கு பயிற்சி அளிக்க மற்றும் திறனை மேம்படுத்தும் பொருட்டு ரூ.**7.5** கோடி பரிந்துரை செய்துள்ளது. மேற்காணும் பயிற்சிக்காக **2018–2019** மற்றும் **2019–2020** ஆண்டுகளுக்கு ரூ.**4,90,32,360/–** நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. **2018–2019–**ஆம் ஆண்டிற்கு ரூ.**3,60,48,980/–** நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**29. விடுமுறை கால குடும்ப நல நீதிமன்றங்கள்**

பணிபுரியும் வழக்காடும் மக்களின் தேவையினை கருத்திற்கொண்டு, நான்கு விடுமுறை கால குடும்ப நல நீதிமன்றங்கள் நாட்டிலேயே முதன் முறையாக சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் அமைக்கப்பட்டு, சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. விடுமுறை கால குடும்ப நல நீதிமன்றங்கள் தொடங்குவதற்கு முன்பு இருந்த நிலையிலிருந்து தற்பொழுது **25** விழுக்காடு கூடுதலான வழக்குகள் முடிவுசெய்யப்பட்டுள்ளன. குடும்ப வழக்குகளை

விரைந்து முடிப்பதே குடும்ப நல நீதிமன்றங்கள் விடுமுறை நாட்களில் இயங்குவதன் உயரிய குறிக்கோளாகும். அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் சமரச முயற்சியின் முடிவுகளே இங்கு வலியுறுத்தப்படுகிறது. குடும்ப நல நீதிமன்றங்களில் பணிபுரியும் நீதிபதிகள் மற்றும் பிற பணியாளர்களுக்கு மதிப்பூதியம் அரசால் அவ்வப்போது வழங்கப்பட்டு வருகிறது.

**30. முடிவுரை**

பாரபட்சமற்ற மற்றும் சுதந்திரமான நீதித்துறை நாட்டின் மக்களாட்சி கூட்டமைப்பு முறையில் ஒரு மைல்கல் ஆகும். நீதித்துறை சுதந்திரமான, தன்னாட்சி பெற்றதாக அமையவும், பொதுமக்கள் குறைகளை நீதிமன்றங்கள் விரைந்து தீர்ப்பதற்கும் உரிய சூழலை உருவாக்கும் விதத்தில் நீதிமன்றங்களுக்குத் தேவையான அனைத்து கட்டமைப்பு வசதிகளையும் அரசு செய்துதரும். அனைவருக்கும் நீதி என்ற உயர்ந்த குறிக்கோளை அடைய அரசு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும்.

**சி.வி. சண்முகம்**
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்

**பிற்சேர்க்கை – 1**

*(பத்தி 2 – ஐ காண்க)*

**தமிழ்நாடு நீதித்துறையின் படிநிலை அமைப்பு**

**முதன்மை இருப்பிட உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் மதுரையிலுள்ள சென்னை உயர்நீதிமன்றக் கிளை**

↓

| ***உரிமையியல் நீதிமன்றங்கள்*** | | | ***குற்றவியல் நீதிமன்றங்கள்*** | |
|---|---|---|---|---|
| **சென்னை மாநகர்** | **வெளியூர்** | | **சென்னை மாநகர்** | **வெளியூர்** |
| சென்னை நகரத்திற்குள் எழும் ரூபாய் ஒரு கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள வழக்குகளை சென்னை உயர்நீதிமன்றம் விசாரிக்கின்றது<br><br>மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள்<br><br>சிறுவழக்குகள் நீதிமன்றங்கள் | மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள்<br><br>சார்பு நீதிமன்றங்கள்<br><br>மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்<br><br>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் | | பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள்<br><br>தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்<br><br>குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |

## பிற்சேர்க்கை – 2

*(பத்தி 3 – ஐ காண்க)*

**சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம்**

| வ. எண் | நீதிமன்றங்களின் / தீர்ப்பாயங்களின் பெயர் | மாவட்ட நீதிபதி | | முதுநிலை உரிமையியல் நீதிபதி | | உரிமையியல் நீதிபதி |
|---|---|---|---|---|---|---|
| | | மாவட்ட நீதிமன்றங்கள் | மத்திய குற்ற புலனாய்வு வழக்கு -தனி நீதிமன்றங்கள் | பெருநகர் குற்றவியல் நடுவர் | இதர வகை பிரிவு | |
| 1. | மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | 14 | 6 | -- | 18 | 1 |
| 2. | சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் | 1 | -- | -- | 8 | 8 |
| 3. | பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் | 2 | - | 1 | 26* | 7 |
| 4. | தொழிலாளர் நல நீதிமன்றங்கள் | 4 | -- | -- | -- | -- |
| 5. | தொழில் தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 6. | விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | 1 | -- |
| 7. | அரசுப் போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 8. | இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் வரும் தனி நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 9. | தலைமை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் | 1 | -- | -- | -- | -- |
| 10. | துணை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் | -- | -- | -- | -- | 1 |
| 11. | குடும்ப நல நீதிமன்றங்கள் | 8 | -- | -- | -- | -- |
| 12. | மகளிர் நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 13. | தமிழ்நாடு முதலீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம் தனிநீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 14. | போதைமருந்துகள் மற்றும் மனமயக்கப்பொருட்கள் தடுப்புச்சட்டம் தனிநீதிமன்றங்கள் | 2 | -- | -- | -- | -- |
| 15. | குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கான அமர்வு நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 16. | சென்னை மாநகராட்சி, சென்னை விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 17. | உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு, சென்னை | 1 | -- | -- | - | -- |
| 18. | துணைச் செயலர், தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணையக்குழு | - | - | - | 1 | - |
| 19. | செயலாளர், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, சென்னை | -- | -- | -- | 1 | -- |
| 20. | ஊழல் வழக்குகளை விசாரிப்பதற்கென சிறப்பு நீதிமன்றம் | -- | -- | -- | 1 | -- |
| 21. | மோட்டர் வாகன விபத்து இழப்பீடு வழக்குகள் – சிறப்பு நீதிமன்றங்கள் | -- | -- | -- | 2 | -- |
| 22. | நிரந்தர மக்கள் நீதிமன்றம் | 1 | - | - | - | - |
| 23. | தலைவர், தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம் | 1 | - | - | - | - |
| 24. | அமர்வு நீதிபதி, தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளைவிசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் | 1 | - | - | - | - |
| | மொத்தம் | **44** | **6** | **1** | **58** | **17** |

**மொத்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை – 126**

**( மாவட்ட நீதிபதிகள் –50, முதுநிலை உரிமையியல் நீதிபதிகள் –59, உரிமையியல் நீதிபதிகள்–17)**

*** குற்றவியல் நடுவர் தரத்தில் 4 விரைவு நீதிமன்றங்கள், 2 நடமாடும் நீதிமன்றங்கள், 2 நிலஅபகரிப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் ஒரு கூடுதல் மகளிர் நீதிமன்றம் உட்பட**

## பிற்சேர்க்கை – 3

*(பத்தி 3 – ஐ காண்க)*

## மாநிலத்தில் செயல்படும் சார்நிலை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம்

| | | மாவட்ட நீதிபதி | | | | | | | | | | முதுநிலை உரிமையியல் நீதிபதி | | | | | | | உரிமையியல் நீதிபதி | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வரிசை எண் | மாவட்டங்கள் | மாவட்ட நீதிமன்றங்கள் | குடிமை உரிமை பாதுகாப்புச் சட்ட / எஸ்சி & எஸ்டி (வன்கொடுமைகள் தடுப்பு) சட்ட தனி நீதிமன்றங்கள் | குண்டு வெடிப்பு வழக்கு/ இனக்கலவர வழக்கு நீதிமன்றங்கள் | தொழிலாளர் நல நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றம் இன்றியமையாப் பொருட்கள் சட்டம்/ போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டம் | தனி நீதிமன்றங்கள் மத்திய புலனாய்வுத்துறை வழக்கு / முதலீட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டம் வழக்கு | குடும்ப நல நீதிமன்றங்கள்/விரைவு நீதிமன்றங்கள் | மகளிர் நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றங்கள் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு | மக்கள் நீதிமன்றம் | தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | சார்பு நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றம் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு | தனி நீதிமன்றங்கள் நில எடுப்பு வழக்குகள் | ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்கள் | மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு | மாநில போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | விரைவு நீதிமன்றங்கள்/கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றங்கள் நில அபகரிப்பு வழக்குகள் | நடமாடும் நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 1. | அரியலூர் | 2 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | - | 1 | 1 | 3 | -- | 2 | -- | 1 | -- | 3 | 4 | -- | -- | -- | -- |
| 2. | கோயம்புத்தூர் | 5 | -- | 1 | 2 | 1 | 2## | 2 | 1 | - | 1 | 1 | 6 | 1 | -- | 1 | 1 | 2 | 8 | 11 | 3# | 1 | 1 | 2 |
| 3. | கடலூர் | 4 | -- | -- | 1 | -- | -- | 1 | 1 | - | 1 | 1 | 9 | 1 | 1 | - | 1 | -- | 9 | 9 | 1# | 1 | - | 4 |
| 4. | தருமபுரி | 2 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 1 | 1 | 1 | 3 | 1 | -- | -- | 1 | -- | 4 | 5 | 1 | 1 | - | 1 |
| 5. | திண்டுக்கல் | 2 | -- | -- | -- | -- | -- | 2### | 1 | - | 1 | 1 | 4 | 1 | -- | -- | 1 | -- | 6 | 6 | 1 | - | 1 | 3 |
| 6. | ஈரோடு | 5 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 1 | 1 | 1 | 7 | 1 | -- | -- | 1 | 1 | 7 | 8 | 2 | 1 | 1 | 2 |
| 7. | காஞ்சிபுரம் | 3 | -- | -- | 1 | -- | -- | 2### | 1 | - | 1 | 1 | 6 | - | -- | -- | 1 | -- | 7 | 7 | 2# | 2 | 1 | 3 |
| 8. | கன்னியாகுமரி | 2 | -- | -- | -- | -- | -- | 2### | 1 | - | 1 | 1 | 7 | - | -- | - | 1 | -- | 9 | 7 | 3# | - | - | 2 |
| 9. | கரூர் | 1 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | - | 1 | 1 | 3 | - | -- | -- | 1 | -- | 3 | 4 | 1 | 1 | - | - |
| 10. | கிருஷ்ணகிரி | 3 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 1 | 1 | 1 | 5 | 1 | -- | -- | 1 | -- | 2 | 4 | 2# | 1 | - | 3 |
| 11. | மதுரை | 5 | 1 | 1** | 1 | 3* | 2## | 1 | 1 | 1 | 1 | 2 | 8 | 1 | -- | 1 | 1 | 2 | 7 | 11 | 3# | 1 | 1 | 2 |
| 12. | நாகப்பட்டினம் | 1 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | 1 | 1 | 3 | - | -- | -- | 1 | -- | 4 | 5 | 2 | - | - | 1 |

**பிற்சேர்க்கை –3 ன் தொடர்ச்சி**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13. | நாமக்கல் | 2 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | - | 1 | 1 | 5 | - | -- | -- | 1 | -- | 6 | 5 | 2# | 1 | 1 | - |
| 14. | நீலகிரி | 1 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | - | 1 | -- | 3 | - | -- | -- | 1 | -- | 3 | 3 | 2# | 1 | - | 2 |
| 15. | பெரம்பலூர் | 1 | -- | -- | -- | -- | -- | - | 1 | - | 1 | 1 | 1 | - | -- | -- | 1 | -- | 2 | 1 | 1# | 1 | - | - |
| 16. | புதுக்கோட்டை | 2 | -- | -- | -- | 1 | -- | -- | 1 | - | 1 | 1 | 3 | - | -- | -- | 1 | -- | 3 | 4 | - | 1 | - | 2 |
| 17. | இராமநாதபுரம் | 2 | -- | -- | -- | -- | -- | 1### | 1 | - | 1 | 1 | 3 | - | -- | -- | 1 | -- | 3 | 4 | - | 1 | - | 4 |
| 18. | சேலம் | 4 | -- | -- | 1 | 1 | -- | 2### | 1 | 1 | 1 | 1 | 7 | 2 | -- | 1 | 1 | 1 | 10 | 13 | 3# | 1 | 1 | 1 |
| 19. | சிவகங்கை | 1 | 1 *# | -- | -- | -- | -- | 1 | 1 | - | 1 | 1 | 2 | - | -- | 1 | 1 | -- | 4 | 3 | 1 | - | - | 4 |
| 20. | தஞ்சாவூர் | 3 | 1 | -- | 1 | 1 | -- | 1### | 1 | 1 | 1 | 2 | 5 | 1 | -- | -- | 1 | -- | 5 | 7 | 2 | 1 | - | 2 |
| 21. | தேனி | 2 | -- | -- | -- | -- | -- | 1### | 1 | - | 1 | 1 | 3 | - | -- | -- | 1 | -- | 5 | 5 | 2 | 1 | - | - |
| 22. | தூத்துக்குடி | 3 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | 1 | 1 | 3 | - | -- | -- | 1 | 1 | 6 | 8 | 2 | 1 | - | 1 |
| 23. | திருச்சி | 3 | 1 | -- | 1 | -- | -- | 1 | 1 | 1 | 1 | 1 | 6 | 1 | -- | 1 | 1 | 1 | 10 | 10 | 1# | 1 | 1 | - |
| 24. | திருநெல்வேலி | 4 | 1 | -- | 1 | -- | -- | 2### | 1 | - | 1 | 1 | 7 | 1 | -- | 1 | 1 | 1 | 13 | 11 | 1# | 1 | 1 | 3 |
| 25. | திருப்பூர் | 4 | - | - | - | - | - | - | 1 | - | 1 | 1 | 7 | - | - | - | 1 | 1 | 6 | 10 | 1 | 1 | - | - |
| 26. | திருவள்ளூர் | 5 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 1 | 1 | 1 | 4 | 1 | 1 | -- | 1 | -- | 8 | 9 | 3 | 1 | - | 2 |
| 27. | திருவண்ணாமலை | 2 | -- | -- | -- | -- | -- | 1### | 1 | - | 1 | 1 | 4 | 1 | -- | -- | 1 | -- | 8 | 7 | 1 | - | - | - |
| 28. | திருவாரூர் | 1 | - | -- | -- | -- | -- | -- | 1 | - | 1 | 1 | 2 | - | -- | -- | 1 | -- | 3 | 4 | 1 | - | - | 3 |
| 29. | வேலூர் | 4 | -- | -- | 2 | -- | -- | 2### | 1 | - | 1 | 1 | 7 | ***1 | 2 | -- | 1 | 1 | 10 | 15 | 1 | - | - | 4 |
| 30. | விழுப்புரம் | 4 | 1 *# | -- | -- | 1* | -- | 2### | 1 | 1 | 1 | 1 | 8 | 2 | -- | 1 | 1 | -- | 15 | 11 | 1 | 1 | 1 | 1 |
| 31. | விருதுநகர் | 2 | 1 *# | -- | -- | -- | -- | 1 | 1 | - | 1 | 1 | 5 | - | -- | -- | 1 | -- | 6 | 8 | 1 | 1 | - | 2 |
| | மொத்தம் | 85 | 7 | 2 | 11 | 8 | 4 | 33 | 31 | 9 | 31 | 32 | 149 | 17 | 6 | 7 | 31 | 11 | 195 | 219 | 47 | 24 | 10 | 54 |
| | | மாவட்ட நீதிபதி –221 | | | | | | | | | | முதுநிலை உரிமையியல் நீதிபதி– 253 | | | | | | | உரிமையியல் நீதிபதி – 549 | | | | | |
| | | | **மொத்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை – 1023** | | | | | | | | | | | | | | | | | | | | | |

* போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் இயங்கும் தனி நீதிமன்றங்கள் உட்பட

\# ஒரு கூடுதல் மகளிர் நீதிமன்றம் உட்பட (குற்றவியல் நடுவர் தரத்தில்)

** இனக் கலவர வழக்கு தொடர்பான நீதிமன்றம்

\## முதலீட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான ஒரு தனி நீதிமன்றம் உட்பட

*** மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம்

\### மாவட்ட நீதிபதி தரத்தில் விரைவு நீதிமன்றங்கள்

*# பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989 தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்ற.ம்

பிற்சேர்க்கை – 4

*(பத்தி 10(ர) –வை காண்க.)*

**நில அபகரிப்பு வழக்குகளுக்கான தனி நீதிமன்றங்களின் விவரம்**

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | இடம் | நீதிமன்றங்களின் எண்ணிக்கை | வ. எண் | மாவட்டத்தின் பெயர் | இடம் | நீதிமன்றங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | சென்னை மாநகரம் | 2 | 14. | சேலம் | சேலம் மாநகரம் | 1 |
| 2. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 1 | 15. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | 1 |
| 3. | கடலூர் | கடலூர் | 1 | 16. | நீலகிரி | உதகமண்டலம் | 1 |
| 4. | தருமபுரி | தருமபுரி | 1 | 17. | தேனி | தேனி | 1 |
| 5. | ஈரோடு | ஈரோடு | 1 | 18. | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி மாநகரம் | 1 |
| 6. | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம், செங்கல்பட்டு | 2 | 19. | தூத்துக்குடி | தூத்துக்குடி | 1 |
| 7. | கரூர் | கரூர் | 1 | 20. | திருநெல்வேலி | திருநெல்வேலி மாநகரம் | 1 |
| 8. | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | 1 | 21. | திருப்பூர் | திருப்பூர் | 1 |
| 9. | மதுரை | மதுரை மாநகரம் | 1 | 22. | திருவள்ளூர் | திருவள்ளூர் | 1 |
| 10. | நாமக்கல் | நாமக்கல் | 1 | 23. | விழுப்புரம் | விழுப்புரம் | 1 |
| 11. | பெரம்பலூர் | பெரம்பலூர் | 1 | 24. | விருதுநகர் | விருதுநகர் | 1 |
| 12. | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 1 | | | **மொத்தம்** | **26** |
| 13. | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | 1 | | | | |

## பிற்சேர்க்கை –5

*(பத்தி 11 – ஐ காண்க)*

**சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயத்தில் தொடுக்கப்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள், தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகள் குறித்த அட்டவணை**

| வ. எண் | ஆண்டு | *உரிமையியல் வழக்குகள்* | | | | *குற்றவியல் வழக்குகள்* | | | | நிலுவையில் உள்ள மொத்த உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | |
| 1. | 2014 | *148451 | 56701 | 42580 | **162572** | **18624 | 39572 | 38454 | **19742** | 182314 |
| 2. | 2015 | 162572 | 65344 | 52252 | **175664** | 19742 | 36291 | 35751 | **20282** | 195946 |
| 3. | 2016 # | 175664 | 63598 | 54922 | **184309** | 20282 | 33145 | 32984 | **20454** | 204763 |
| 4. | 2017 # | 184309 | 53860 | 53066 | **188262** | 20454 | 34776 | 34108 | **21122** | 209384 |
| 5. | 2018 | 188262 | 55540 | 60699 | **183103** | 21122 | 36154 | 36366 | **20910** | 204013 |

*சென்னை உயர்நீதிமன்ற நிர்வாகக் குழுவின் வழிகாட்டுதலின் படி 218705 பல்வகை உரிமையியல் வழக்குகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை

**சென்னை உயர்நீதிமன்ற நிர்வாகக் குழுவின் வழிகாட்டுதலின் படி 24274 பல்வகை குற்றவியல் வழக்குகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை

# நேரடி சரிபார்த்ததற்கு பின்

**குறிப்பு: 10.11.2014** நாளிட்ட சென்னை உயர்நீதிமன்ற நிர்வாகக் குழுவின் வழிகாட்டுதலின் படி அசல் வழக்குகள் (உரிமையியல் மற்றும் குற்றவியல்) மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது

## பிற்சேர்க்கை – 6

*(பத்தி 11 – ஐ காண்க)*

### சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடுக்கப்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள், தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகள் குறித்த அட்டவணை

| வ. எண் | ஆண்டு | *உரிமையியல் வழக்குகள்* | | | | *குற்றவியல் வழக்குகள்* | | | | நிலுவையில் உள்ள மொத்த உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | |
| 1. | 2014 | *59850 | 30527 | 24035 | **66342** | **13351 | 26447 | 24885 | **14913** | 81255 |
| 2. | 2015 | 66342 | 32545 | 24418 | **74469** | 14913 | 27833 | 28733 | **14013** | 88482 |
| 3. | 2016 | 74469 | 34124 | 30317 | **78276** | 14013 | 27346 | 26783 | **14576** | 92852 |
| 4. | 2017 | 78276 | 33596 | 33835 | **78037** | 14576 | 21554 | 21075 | **15055** | 95092 |
| 5. | 2018 | 78037 | 34622 | 34465 | **78194** | 15055 | 26293 | 30551 | **10797** | 88991 |

*சென்னை உயர்நீதிமன்ற நிர்வாகக் குழுவின் வழிகாட்டுதலின் படி 63377 பல்வகை உரிமையியல் வழக்குகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை

**சென்னை உயர்நீதிமன்ற நிர்வாகக் குழுவின் வழிகாட்டுதலின் படி 10847 பல்வகை குற்றவியல் வழக்குகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை

**குறிப்பு: 10.11.2014** நாளிட்ட சென்னை உயர்நீதிமன்ற நிர்வாகக் குழுவின் வழிகாட்டுதலின் படி அசல் வழக்குகள் (உரிமையியல் மற்றும் குற்றவியல்) மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது

## பிற்சேர்க்கை –7

*(பத்தி 11 – ஐ காண்க)*

### மாநிலத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள், தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகள் குறித்த அட்டவணை

| வ. எண் | ஆண்டு | ***உரிமையியல் வழக்குகள்*** | | | | ***குற்றவியல் வழக்குகள்*** | | | | நிலுவையில் உள்ள மொத்த உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | |
| 1. | 2014 | *560382 | 345882 | 291512 | **614752** | 445111 | 1332774 | 1353817 | **424068** | 1038820 |
| 2. | 2015 | 614752 | 335867 | 298922 | **651697** | 424068 | 859455 | 852427 | **431096** | 1082793 |
| 3. | 2016 # | 651697 | 305192 | 333912 | **620808** | 431096 | 704008 | 683199 | **450558** | 1071366 |
| 4. | 2017 # | 621039 | 327844 | 338994 | **609947** | 451033 | 681227 | 676328 | **455932** | 1065878 |
| 5. | 2018 # | 609947 | 340021 | 332950 | **616179** | 455931 | 585706 | 573234 | **468107** | 1084286 |

*சென்னை உயர்நீதிமன்ற நிர்வாகக் குழுவின் வழிகாட்டுதலின் படி **282822** பல்வகை உரிமையியல் வழக்குகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை

**#** நேரடி சரிபார்த்ததற்கு பின்

**குறிப்பு: 10.11.2014** நாளிட்ட சென்னை உயர்நீதிமன்ற நிர்வாகக் குழுவின் வழிகாட்டுதலின் படி அசல் வழக்குகள் (உரிமையியல் மற்றும் குற்றவியல்) மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது

*******